தென்மொழி

இவர்க்கிடையில் வரும்விளைவு தழைப்ப தென்றோ?...!!

தமிழினத்தின் ஒருசாரார் பார்ப்பனர்க்கும் வடவர்க்கும்
தமையடகு வைக்கும்தன் மான மற்றோர்;
தமிழினத்தின் ஒருசாரார் தமிழரையே அரசியலால்
சுரண்டியுண்ணும் தாய்க்கொலைஞர்; மற்றோர் சாரார்,
தமிழினத்தில் தாம்பிறந்தும் தமிழரையே எதிர்க்கும்,இனப்
பற்றில்லா உட்பகைவர்; பிறிதோர் சாரார்,
தமிழினத்தின் முன்னேற்றம் கருதுவரைத் தந்நலத்தால்
புறங்குத்திக் கட்டழிக்கும் தாழ்மை யோரே!

தமிழினத்தின் தாழ்ச்சியினை-வரலாற்றின் வீழ்ச்சியினை-
அவைமீட்கும் மீட்சியினை - எண்ணி டாமல்,
தமிழினத்தின் அறியாமை,மெலிவுள்ளம்-எனுமிவற்றைக்
காசாக்கும் கலைக்கயவர் - இன்னோர் சாரார்!
தமிழினத்தை உள்ளரித்தே உயிர்ப்பழிக்கும் மதக்கேடர்,
சாதிவெறி கொண்டவர்கள் வேறோர் சாரார்!
தமிழினத்தை மீட்டெடுக்கும் உறுதியினோர்க் குரமழிக்கும்
இவர்க்கிடையில் வரும்விளைவு தழைப்ப தென்றோ?

சுவடி : 21
ஓலை : 4

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
1 25 உருபா

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

0: 1052 ; திரு. பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, நாங்கள் சென்னை, 16 ஆவது வட்ட தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள்,

கலைஞர் அவர்களும் மற்றைய தி.மு.க. வின் மேல் மட்டத் தலைவர்களும் தங்களை ஒதுக்குகிறார்கள் என்ற தங்களின் குற்றச் சாட்டுகள் உண்மையாக இருப்பினும், கீழ்மட்டத்தில் உண்மை யான தமிழுணர்வு கொண்டவர்கள் நாங்களே. இதற்குச் சிறந்த பல எடுத்துக்காட்டுகளைக் கூற முடியும். குறிப்பாகத் தங்களின் திருவொற்றியூர் கூட்டத்திற்கான சுவரொட்டியை இந்த நக ரெங்கும் ஒட்டியது நாங்கள்தாம். இதுவரை எங்களில் பலரைத் 'தமிழ்நிலம்' பற்றிய சிறப்புகளை அறியச் செய்து அதன் விற்பனை யைப்பெருக்க முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம், இதனைத்தாங் கள் திரு. துரை. தென்னவன் வாயிலாக அறியலாம்.

நாங்களும், தங்களைச் சார்ந்த கழகத்தவரும் கலைஞர், வீர மணி, பிரபாகரன் போன்றோரைச் சாடுவதை நாங்கள் வன்மை யாகக் கண்டிக்கிறோம்.

பார்ப்பனர்களைப் பாருங்கள். தங்களைச் சார்ந்தவர்கள் தங் களுக்கு இரண்டகமிழைப்பினும் எந்தச் சூழலிலும் அவர்களை வெளிப்படையாக அவர்கள் சாடுவதில்லை. ஈழ விடுதலைப் போராளிகள் கூட, அமிர்தலிங்கம் அவர்களை எங்களின் (தமிழர் விடுதலைக் கூட்டணி) தலைவர் என்றே குறிப்பிடுவர், அவர் எத் தனையோ இரண்டகமிழைத்த போதிலும். இதை இம்முறை வேண்டுகோளாகத் தெரிவிக்கிறோம். தமிழினத்தைச் சார்ந்த எந்தத் தலைவரையும் திறனாய வேண்டாம் என்று தாழ்மையுடன் வேண்டுகிறோம். தங்களின் மேலான விடையை எதிர்பார்க் கின்றோம்.

இங்ஙனம் — வா.பாத்திபன் — சென்னை -19

0: 1053 ; தென்னவர் இனத்தை முன்னேற்ற உழைக்கும் கழகமுதல்வர் பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

வணக்கம். மக்களுக்குத் தொண்டு செய்வதாகவே விளம்பரப் படுத்தப்பெற்றுப் பணமுதலைகளுக்கு ஏதுவான தன்னலத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. திராவிட இயக்கங்களில் ஒன்று மனமொடிந்து துவண்டு விட்டது. இன்னொன்று தான் உச்சாணிக் கிளையில் நிற்பதை அறியாமல், வெற்றிபெற்ற எக்களிப்பில் செருக்குப் பிடித்துப் பிதற்றுகின்றது. நடுவணரசுக்குக் கட்டுப் பட்ட அடிமையாகத் தமிழகம் ஆகிவருவதை, மூளைச்சலவை செய்யப்பெற்ற ஏமாளித்தமிழர்கள் இன்னும் உணரவில்லை.

இனியாகிலும் தி.மு.க.வும் தி.க.வும், கடமையுணர்வும் தோழமையுணர்வும் கொண்டு நம் உ.த.மு.க.வுடன் இணைந்து. தமிழ்நாட்டைத் தனி நாடாக்குதற்குச் செயல்பட வேண்டும். இது தொடர்பாகத் தாங்கள் கலைஞர், வீரமணி ஆகியோருடன் கருத் துரையாட முயற்சி செய்யலாம். ஐயா, இனி எந்தவழியிலும் காலத் தாழ்த்தம் ஏற்பட இடங்கொடுக்கக் கூடாது. எவ்வகை யானும் தனித்தமிழ்நாடு அடைவதற்குத் தங்களையே நாங்கள் முழுமையாக நம்பியிருக்கின்றோம்.

Scanned with CamScanner



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி
ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன்
தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன்
தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன்
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன)

சுவடி:21] தி.பி.௨௦கரு சுறவம் [சன-பெப்-85] [ஓலை 4

எழுச்சி பெறுமல், தமிழரின் எந்தச் சிக்கலுக்கும், தீர்வு வராது!



தமிழர்க்கு 'இந்திச் சிக்கல்' நீண்ட நெடுங் காலச்சிக்கல். வேறு எந்த மாநிலமும், தமிழ் நாட்டைப்போல் இந்தித் திணிப்பைப் பெரிதாகக்கருதி எதிர்க்கவில்லை. தமிழர்களே இந்தியைத் தீவிரமாக எதிர்க்கின்றனர். காரணம், இந்தி நுழைவால் இந்தியாவின் பிறமொழிகள் அனைத்தும் வளமும் சிறப்பும் அடையும்; ஆனால் தமிழ் ஒன்றே தாழ்ச்சி பெறும். தமிழ்மொழி தாழ்ந்தால் தமிழனும் கட்டாயம் தாழவே செய்வான். எனவேதான், நம் முன்னைய அரசியல்,

இனவியல், மொழியியல் தலைவர்கள் அனைவரும் இந்தியை எதிர்த்தனர்; அதற்காகப் போராடினர். இன்னும நாம இந்தியை எதிர்க்கிறோம்; ஆனால் போராட்டமில்லை. 1965-க்குப் பின இந்தியை எதிர்த்து எந்தக் கிளர்ச்சியோ, போராட்டமோ, நம்மிடம் எழுச்சி பெறவில்லை. எனவேதான், இந்தி இன்று தொடர்வண்டி நிலையம், அஞ்சல் நிலையம், அரசு அலுவலகங்கள் என்று படிப்படியாகக் கால்வைத்து வந்து, இறுதியில் வானொலி வழியாகவும், தொலைக்காட்சி வழியாகவும் நம் இல்லங்களிலேயே நுழைந்து கூத்தாடுகின்ற அளவுக்கு வந்துவிட்டது. நம் இளைஞர் மனங்களிலும் அஃது இடம் பிடிக்கின்ற நாள் மிக அண்மையிலேயே வரத்தான் போகிறது.

இனி, தில்லியாட்சியை, அரசியல் அடிப்படையிலேயே வேறு சில மாநிலங்கள் எதிர்க்கின்றன. ஆனால், தமிழ்நாடோ அதை இன அடிப்படையிலும், மொழி, பண்பாட்டு, கலையடிப்படைகளிலும் எதிர்த்து வருகிறது. எனவே, தில்லியாட்சியால், எல்லாரையும் விட, தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்குந்தாம் இன்னுஞ்சொன்னால் தமிழ் நாட்டுக்குந்தான் கேடுகள், நலிவுகள், அழிவுகள் மிகுதி. ஆனாலும் தமிழ்நாடும் இங்குள்ள தலைவர்களும், பிற சில மாநிலங்களைப் போலும், அங்குள்ள தலைவர்களைப் போலும், வெறும் அரசியல் அதிகார அடிப்படையில் மட்டுமே தில்லியை எதிர்க்கின்றனர். வெறும் அரசியல் அதிகாரத்திற்காக மட்டுமே, நாம் தில்லியை எதிர்ப்பதால்தான், மற்றவர்களை விட தமிழர்களைத் தில்லி மிக எளிதாகவும், சூழ்ச்சியாகவும் அடக்கி விடப் பார்க்கிறது. மத மூட நம்பிக்கைகளை அளவிறந்து பரப்பியும், கலை, நாடக, திரைப் படத்துறை அருவருப்புகளை மக்களிடத்துப் பரவலாக்கி, அவர்களின் அறிவுச் சிந்தனைகளைத் திசை திருப்பியும், மக்களைத் தம் மொழி இன நல முயற்சிகளில் ஈடுபடாமல் தடுக்கிறது வெளிநாடுகளில உள்ள தமிழர்களைத் தமிழர்கள் என்றுகூடச் சொல்வதில்லை; பாரதத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறி அவர்களின் துயரங்களைத் தமிழர்கள் உணராமல் இருக்கச் செய்கிறது. குறிப்பாகத் தமிழீழத்தவர்களை இந்திய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றோ, பாரத இனத்தவர்கள் என்றோ கூறி, தமிழின உணர்வு வலிவடையாமல் செய்கிறதை அனைவரும் உணர்ந்திருக்கலாம்.

இன்று, தமிழீழச் சிக்கலைத் தில்லி அணுகுகின்ற முறையே, தமிழர்களை எல்லா நிலையிலும் மெலிவுபடுத்த வேண்டும் என்னும் கரவான குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கிறது. இல்லையானால், இலால்பகதூர் சாத்திரி காலத்திலிருந்து, தமிழீழ ஏதிலிகளுக்கு ஒரு தீர்வு ஏற்படுத்தாமல், தில்லி, பேசாமல் இருக்குமா? இந்திரா காந்தி இறுதிவரை, தமிழீழப் போராட்டத்தில், இலங்கையின் கொடுந் தலைவன் செயவர்த்தனவிற்கு மறைமுக ஆதரவே காட்டி வந்தார். வெறும் பேச்சுரை என்றும் வட்டமிசை மாநாடு என்றும், அவன் நடத்திய நாடகங்களுக்கு, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றவர்களைச் சூதாட்டக்கருவிக

ளாகவே பயன்படுத்தியுள்ளார்; இதை நாம் பலமுறை வெளிப்படையாகவே எடுத்துக் கூறியும், அமிர்தலிங்கம் போன்றவர்கள், தம் மெலிவுத் தன்மைகளைக் கட்டிக் காத்துக் கொள்வதற்கேற்ற வாய்ப்பாகவே அவர் ஏற்பாட்டைப் பயன்படுத்திக் கொண்டனர். குதிரை திருட்டுப் போனபின், கொட்டிலை இழுத்துப் பூட்டும் பேதைகளாக, இன்று தமிழீழம் ஒன்றே நம் குறிக்கோள் என்றும், பேச்சுரைகளாலும், வட்டமிசை மாநாடுகளாலும் பயனில்லை என்றும் கூக்குரலிடுகின்றனர். பட்டணம் பறிபோனபின் எல்லைக் கதவுகளை இழுத்துப் பூட்டுகின்ற கோமாளி அரசர்களாக இவர்கள் பேசி வருகின்றனர். இவர்கள் பேச்சுரை என்றும் தூதுரை என்றும் தில்லிக்கும் சென்னைக்கும் கொழும்புக்கும் பறந்து சென்றும், வெளிநாடுகளுக்குப் போய் வந்தும், தமிழீழப் போராட்டத்தையும் அங்கு விழுந்த தமிழர் பிணங்களையும் முன்வைத்து, வேண்டிய அளவு பணங்களைத் தலைக்குத்தலை தம் சட்டைப் பைகளில் நிரப்பிக்கொண்ட பின், இப்பொழுது வீரம் பேசி என்ன பயன்? இந்த இடைக் காலத்தில் செயவர்த்தனனும், அதலத் முதலியானும், நாடு நாடாகப் போய், அரசு அரசாகக் கேட்டுக், கருவிகளையும் காரணங்களையும் பெருக்கியும் வலுப்படுத்தியும் கொண்டான்களே! இப்பொழுதுதான் இவர்களுக்கு அறிவு தெளிந்ததோ? உண்மை விளங்கியதோ?

இனி, இந்திரா போய் இராசீவ் வந்த நிலையில்தான் என்ன நடந்துவிட்டது. தாய் போன அதே வழியில்தான் தனயனும் போகிறார்! அண்மையில் இந்தியா வந்த அதுலத் முதலியானிடம், இராசீவ் பேச்சுரை நடத்திய படங்கள் செய்தித் தாள்களில் வந்ததை அனைவரும் பார்த்திருக்கலாம். இருவர் முகங்களில்தாம் எத்துணை களிப்பு! பெருமிதச் செருக்கு! கூர்ந்து பார்த்தவர்களுக்கு விளங்கியிருக்கும்! அவர்களின் முயற்சி அவர்களின் முகங்களிலேயே தெரிந்ததே!

இந்தியக் கடற்கரைப் பகுதிக்குள் தாறுமாறாக நுழைந்துவந்த இலங்கையின் கருவிகள் நிறைந்த படைத்துறைப் படகை, ஏதோ, பிடிப்பதுபோல் பிடித்து, எச்சரிப்பதுபோல் எச்சரித்து, விடுவிப்புச் செய்ததும், போர்ச்சுகல்லிலிருந்து, பல்லாயிரக் கணக்கான உருபா மதிப்புள்ள போர்க் கருவிகளை, தமிழர்களை அழித்தொழிக்க, இலங்கைக்கு எடுத்துச்சென்ற சரக்கு வானூர்தி எதிர்பாராத வகையில் திருவனந்தபுரத்தில் இறங்க, அதனால் பெரும் விளைவை ஏற்படுத்தி விடலாம் என்று எண்ணிய அதிகாரிகள் அதனைப் பிடித்துவைத்துச் செய்தியைத் தில்லிக்கு அனுப்ப, அதனை நோகாமல், நொடியாமல், கன்னெய் (பெட்ரோல்) நிரப்பி, இவற்றையும் கொண்டு போய்த் தமிழர்களைச் சுட்டுப் பொசுக்குங்கள் என்று கூறாமல் கூறியபடி, அதனை உடனே விடுவிப்புச் செய்த இராசீவ் காந்தியின் செயலும் எதைக் காட்டுகின்றன? தாய்க்குத் தனயன் தப்பாமல் பிறந்திருக்கின்றான் என்பதையன்றோ? இவற்றின் உள்ளார்ந்த சூழ்ச்சிகளின் உளவுகளை அறிந்து கொள்ளாமல், இன்னமும் இராசீவ் காந்திக்குத் தொலைவரி அடிப்பதும்,

அறிக்கைகள் விடுப்பதும், தீர்மானங்கள் போடுவதும், விழுந்தடித்துக்கொண்டு நேரே தில்லிக்குப் பறப்பதும் வீணான செயல்கள் அல்லவா? இவற்றுக்கெல்லாம் விளைவு என்ன வரும் என்று நமக்குத் தெரியாதா? இராசீவுக்கும், செயவர்த்தனாவுக்கும் எது நோக்கமாக இருக்க முடியும் என்று நமக்குப்புரிகிறது! ஆனால் இங்குள்ள தலைவர்களின் நோக்கந்தான் நமக்குப் புரிந்தும் புரியாமலும் இருக்கிறது.

எத்தனையோ வெளிப்படையாக நாம் எழுதியும் பேசியும் ஆகிவிட்டது. நம் தொடை நடுக்கங்கள் இன்னும் தீரவில்லையே! என்ன செய்வது? நமக்கோ போதுமான ஆள்வலிவோ, பொருள் வலியோ இல்லை. இவை இரண்டையும் வருவித்து (வரவுவைத்து)க் கொண்டவர்களன்றோ எழுந்து நின்று போராடவேண்டும். வெறும் அடையாள மறியலும், அறைகூவலும் நடந்து என்ன பயன்?

சிங்களவர்களுக்கஞ்சி நாள்தோறும் நூற்றுக்கணக்கில் தமிழீழ ஏதிலிகள் தமிழகத்திற்கு வந்துகொண்டேயுள்ளனர். நாள்தோறும் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்; தமிழ் இளைஞர்கள் உறுப்புச் சிதைவு செய்யப்படுகின்றனர்; தமிழ்ப் பெண்களும் தாய்மார்களும் மானமிழந்து, தற்கொலை செய்துகொள்கின்றனர்; குழந்தைகள் அழிக்கப்படுகின்றனர்; குடியிருப்புகள் கொளுத்தப் படுகின்றன; நாள்தோறும், வேளைதோறும் அங்குள்ளவர்கள் குற்றுயிராயும் கொலையுயிராயும் நடுங்கிச் சாகின்றனர். ஐயகோ! நினைத்தால் நெஞ்சு புண்ணாகிறது! குருதி கொப்பளிக்கிறது! உயிர் சுருங்கிச் சுண்டுகிறது! எந்தமிழ் இனமே! நீ என்றைக்குத்தான் மான எழுச்சியுற்று வீறுகொள்ளப் போகிறாயோ?

ஓர் எழுச்சி பெறாமல், விடுதலைச் சூள் உரைக்காமல், இவை அனைத்துக்குமான ஒட்டுமொத்த முடிவு ஒன்று ஏற்படும் என்று, ஏ! இளைஞனே! நீ எண்ணுகிறாயா? ஏ, இளைஞையே! நீ கருதுகிறாயா? ஏ! தமிழ்த் தலைவனே! நீ கற்பனை செய்கிறாயா? முடியாது! முடியாது; முடியவே முடியாது! இவ்வழிவுக்கெல்லாம் ஒரு விடிவு காண்பதற்கு, ஒரு முடிவு செய்வதற்கு, நீ எழுச்சி பெற்றே ஆதல்வேண்டும்! அதுதான் வழி; அதுதான் உறுதி!

இம்முடிவுக்கு, இப்பொழுது, தமிழீழக் கூட்டணித் தலைவர்கள் வந்ததுபோல், நீங்களும் ஒருநாள் வருவீர்கள்! அப்பொழுது நீங்கள் எம்முடிவை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்! எம் வழியைத்தான் பின்பற்றியாகவேண்டும்! எம் பாதையில்தான் வந்தாக வேண்டும்! ஆனால், அந்த நாளைக்குள் எம் இனமே அழிந்துபோய்... நீங்களும் நானும் எங்கெங்கோ, காற்றிலன்றோ அலைபரவிக் கொண்டிருப்போம்! ஆனால் அக்கால், நம்மைப் பிரித்து உணர்வதற்கு நம் மரபினரில் எஞ்சியவர்கள் ஓரிருவர்கூட இல்லாமலா போய்விடுவர். ஏ! அந்தக்கால இருளே, நீ இன்னும் சிலநாள்கள் எட்டியிரு! அதற்குள் வந்துவிடாதே!

Scanned with CamScanner

பெயர்ப்பட்டியல் — 6 :

தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகள்!

தென்மொழி சுவடி — 20, ஓலை 5—6-இல் வெளியிடப்பெற்ற அறிக்கையின்படி, தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைப்பாட்டு முயற்சிகளுக்குத் துணையாக நின்றுதவிய அன்பர்களின் பெயர்ப் பட்டியல்கள் கீழே கொடுக்கப்பெறுகின்றன.

1. வாழ்நாள் உறுப்பினர்கள் பட்டியல் :

தென்மொழி :

22	வி. காந்தி.	வெங்காலூர்	200-00
23	கோ. உள்ஒளி,	திருப்பத்தூர், வ.ஆ.	200-00
24	இர. இசை,	சோழபுரம்	200-00
25	அறிவுடை நம்பி,	மூலனூர்	200-00

தமிழ்ச்சிட்டு :

16	இர. தேமா,	சோழபுரம்	120-00
17	வி. காந்தி.	வெங்காலூர்	120-00

2 பத்து உறுப்பினர்கள் சேர்த்த பயனுறு தொண்டுள்ளப் பேராளர்கள் :

தென்மொழி :

7	கி. சீரங்கராயன்,	தாராபுரம்	10 × 15 10 உறுப்பினர்கள்	150-00
8	பழனி மகிழ்நன்,	பழனி	10 × 15 10 உறுப்பினர்கள்	150-00

தமிழ்ச்சிட்டு:

9	தங்கவேலு,	மணலூர்ப்பேட்டை	19 × 6 19 உறுப்பினர்கள்	114-00
10	கன்னல்,	கரூர்	14 × 6 14 உறுப்பினர்கள்	84.00
11	தலைமை ஆசிரியர்,	வ. களத்தூர்	10 × 6 10 உறுப்பினர்கள்	60-00
12	கிருட்டினமூர்த்தி இராசகோபால் தமிழாசிரியர்கள்	சென்னை	100 × 6 100 உறுப்பினர்கள்	600-00

3 புரப்பாளர் வரிசையில் இணைந்த பொன்மனச் செம்மல்கள் :

1	கா. இளமுருகன்,	புன்செய்ப்புளியம்பட்டி	1000-00
2	எசு. ஆர். எசு. பிரான்சிசு,	சென்னை	1000-00

4. நன்கொடை நல்கிய நல்லருளாளர்கள் :

(26—11—84 முதல் 15—2—85 வரை)

1.	கலச. இராமலிங்கம்,	சென்னை	25-00
2.	மு. ஞானப்பிரகாசம்,	ஓலகடம்	3-00
3.	க. அரங்கச்செல்வனார்,	கோபி	3-00

Scanned with CamScanner

மா. கோ இரா-வின் மறு வாழ்க்கை!

ஆயிரக் கணக்கானவர் நம்பிக்கை இழந்தனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் நம்பிக் கொண்டிருந்தனர் முன்னவர், நம்பிக்கை இழக்கும் அளவுக்கு அவர் நோய் கடுமையாக இருந்தது. பின்னவர், நம்பிக்கை கொள்ளும் அளவுக்கு அவர்மேல் மக்களின் அன்பு மிகுதியாக இருந்தது. இறுதியில் நம்பிக்கையும், மருத்துவத் திறனும் அவரைப் பிழைக்கவைத்தன! மறு வாழ்வு பெற்று, மூடாக்குப் போட்டுப் படுத்துக்கொண்டு அமெரிக்கா சென்றவர், முதலமைச்சராக வெற்றிநடை போட்டுத் தமிழகம் திரும்பினார். தமிழக முதல்வர் மா. கோ. இராமச்சந்திரன் அவர்களின் வாழ்க்கையில் இஃது இரண்டாவது பிழைப்பு. முதலில் குண்டுக்குத் தப்பி உயிர் வாழ்ந்தார்; இக்கால் கொடியநோயிலிருந்து உயிர் மீண்டார். முன்னது செயற்கைத் தாக்கம்! இக்கால் இயற்கைத் தாக்கம். இரண்டிலிருந்தும் அவர் பிழைத்துக் கொண்டார். இனி, இறுதிவரை அவர் நலமாக வாழ்ந்து, நிறைவாழ்வு காண, நெஞ்ச நிறைவுடன் வாழ்த்துகின்றோம். —ஆசிரியர்.

4.	சத்தியமூர்த்தி,	வெங்காளூர்	10-00
5.	எம். சேரலாதன்,	,,	100-00
6.	துரை. சம்பத்குமார்	ஈரோடு	4-00
7.	பா. இளங்கோ	சென்னை	10-00
8.	வி. காந்தி	வெங்களூர்	14-00
9.	வை. செயராமன்	உடுமலைப்பேட்டை	2-00
10.	பாலு, அம்சவேணி	,,	15-00*
11.	பி, லோகநாதன்	செருக்களை	10-00
12.	சி. ச. கருப்பையா	பார்த்திபனூர்	51-00
13.	செங்கோட்டய்யா நல்லையா	மலேசியா	50-00

*உடுமலை நிகழ்ச்சியின்பொழுது, திருவாளர்மார் பாலு—அம்சவேணி இணையரின் ஓராண்டுச் செல்வ மழலைக்குத் தமிழறிவாணன் என்று ஆசிரியர் பெயர் சூட்டியபொழுது, அவர்கள் அன்பளிப்பாக வழங்கிய தொகை. செல்வன் தமிழறிவாணன் இனிதே வளர்ந்து, எல்லா நலன்களும் வளங்களும் பெற்றுப் பெயரும் புகழும் பொருந்தி இனிது வாழ, நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகின்றோம்.

பிழை திருத்தம்

சு. 21-ஓ-1இல் வெளியாகிய பெயர்ப் பட்டியல் 4-இல் தமிழ்ச் சிட்டுப் பெயர் வரிசையில் வெளிவந்துள்ள எண். 15 இராம. அருணாசலம், மேட்டூர் அணை, என்னும் வாழ்நாள் உறுப்பினர் பெயரைத் தவிர்த்துப் படிக்க.

தென்மொழி-பெயர் வரிசை எண். 20 இல் உள்ள பெயரை இரா, அருணாசலம் என்று திருத்திக்கொள்க.

சுவடி 21-ஓ 2 இல் வெளிவந்த பெயர்ப் பட்டியலில் தமிழ்ச் சிட்டு வாழ்நாள் உறுப்பினர் அ. தமிழரசன் வரிசை எண். 15 என்று இருத்தல்வேண்டும். —அமைச்சர்.

Scanned with CamScanner

ஓர் உணர்வு மடல்

பாலும் நீரும் போலும் பார்ப்பனர் நட்பு!

பெருமதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

இந்தச் சுற்றுப்போக்கில் ஒரு வரலாற்று முகாமையான நிகழ்ச்சி நினைவு கூறத்தக்கது. அதுதான் நீங்கள் உடுமலைப் பேட்டைப் பொதுக் கூட்டத்தில் தோழர். நாகராசனுரைத் தமிழர் என வெளிப் படுத்தியது. (பிரகடனப்படுத்தியது) மார்க்சிய மூதறிஞர் மட்டுமன்றிப் பூணூலைத் தூக்கி எறிந்துள்ளமையானும் தாழ்த்தப்பட்டோர் குலப் பெண்ணைத் தம் வீட்டுச் சமையலாளராக அமர்த்தியுள்ளமையானும் அவரின் பிராமணியக் கொள்கைத் துறவும் மக்கள் நல வேட்கையும் அவருடைய எளிமையான நடைமுறைகளின் மதிப்புறவும் கூட்டத்தார் உணருமாறு உரைத்தமையை எண்ணியெண்ணி நெகிழ்ந்து வருகின்றேன். அஃதொரு வரலாற்று நிகழ்ச்சி என்பதைத் தமிழர் உணரல் வேண்டும். பிரமணிய வருண தர்மத்தை உடைத்து வெளியேறியுள்ளவர் யாவரே ஆயினும் அவரை நாம் இருகை கூப்பி வரவேற்க வேண்டும். வறட்டுத தனமான பார்ப்பன இன வெறுப்பு, வளரும் அறிவியற் காலத்திற்குப் பொருந்தாதது மட்டுமன்றிப் புறக்கணிக்கத் தக்கதுமாகும். பிராமணிய வருண தருமமும் அதன் வீச்சாயுள்ள இன்றைய மதமூடநம்பிக்கைகளும் அன்று உங்கள் பேச்சில் ஐரோப்பிய நாடுகளின் முன்னேறிய அமைப்போடு உறழ்ந்து காட்டப்பெற்று உடைத்துச் சுக்கல் சுக்கலாகப் பெற்றமை எண்ணியெண்ணி உணரற்பாலது. தங்களின் ஐரோப்பியச் சுற்றுச் செலவின் பயன் எங்களுக்கு இப்பொழுதுதான் புலப்படுகிறது. ஒரு தமிழறிஞன், தமிழினத் தொண்டன் வெளிநாடு சென்று வருவதன் பயன், விளைவு இப்படியன்றோ இருத்தல் வேண்டும்? ஐயகோ, நம்முடைய அமைச்சர்கள், அரசியற்காரர்கள், அரசு அதிகாரிகளினுடைய வெளிநாட்டுச் செலவுகளால் நமக்கு ஏற்படும் வெளிநாட்டுச் செலாவணி 'தண்ட' (வெட்டிச்செலவு) மாவது ஒரு புறமிருக்கட்டும். அவர்கள் கண்ணுக்கு ஏன் நீங்கள் வெளிநாட்டில் கண்ட செப்பமான குமுகாய அமைப்பும், வாழ்விய லொழுங்கும் புலப்படவில்லை? ஒழுக்கக் கேட்டைக் கூட ஒழுங்கு படுத்தியுள்ளமையும், இரவு 10 மணிக்கு மேல் வெளிச்சம் கூட வீட்டுக்கு வெளியில் வரா ஒழுங்கும், விரும்பாத பெண்ணின்மீது விரல் பட்டால் கூட கொடுக்கப் பெறும் கடும் தண்டனையும், குமுகாய அமைவை (Social hormony) எவ்வளவு எங்களுக்கு விளங்குமாறு உரைத்தீர்கள்! அன்றைய உங்களின் உரைக்கே உரைசெய்ய வேண்டுமே! தனிமைப் பின்னுரைக்கு நேரமின்மையால் அஃதியலாவது போயிற்று.

அடுத்த நாள் விடுதியிலிருந்த போது தோழர் நாகராசனார்க்கு விடுத்த அன்புரைகள் உன்னத்தக்கன. அவரின் ஆண் பிள்ளைகளுக்குக் கலப்பு மணமே செய்விக்கப்பெற வேண்டுமென்றும்

Scanned with CamScanner

அவர்கள் அந்தத் துறையில் ஆற்றுப் படுத்தப்பெற வேண்டுமென்றும் தாங்கள் கூறியமையும், நாகராசனும் அதனை உற்றுச் செவி மடுத்தமையும் எம் போன்றோர்க்குப் பெரு மகிழ்வூட்டின. "பாலும் நீரும் போலும் பார்ப்பன சிநேகம்" என்ற வள்ளலாரின் பட்டறிவுரை எனக்கு அப்பொழுது தான் விளங்கினது. எண்ணெயும் நீரும் போல் கலக்கவியலாதது அன்று பார்ப்பன நட்பு என்பது மட்டுமன்றி, இருதரப்பாரும் தன்மை மாற்றமுமடைய வேண்டுமென்கிறார் வள்ளலார். அம் மெய்யறிவாளரின் கூற்றுப் போலவே தங்களிருவரின் நட்பால் தமிழினம் பயன் பெறுமாக! போலிக் குமுகாயச் சீர்திருத்தக்காரர் தங்கள் மீது வாரி வீசப் போகும் பொய்மைச் சேற்றைத் தடுத்து நிறுத்தும் படலமாய் நாங்கள் இருக்கிறோம்! கவலற்க. இப்பொழுது நெல்லை மாவட்டத்தில் நம்மை ஆர். எசு. எசு. அமைப்பிடம் பணம் பெறும் ஆள்கள் என்று சொல்வதாய்ச் செவியுற்றோமன்றோ? காலம் உண்மையை உணர்த்தட்டும்! கவலைப்படாது பணி செய்வோம். நம் கடன் பணி செய்து கிடப்பதொன்றே. ஆனால் வெறுக்காமல் கொள்கையை எதிர்ப்பதும் மறுப்பதும் செய்தல்வேண்டும். இந்நிகழ்வால் நம்முடைய 'வருண தருமம்' என்னும் ஆரிய நிறவெறிக் கொள்கை யெதிர்ப்பும் அதனுடைய இன்றைய நிலைப்பாடான மத, சாதியமைப்பு எதிர்ப்புகளும் தொடரும் என்பதையும் நம் தொண்டர்கள் நினைவிலிருத்தவேண்டியன.

ஓய்வின்மையான் அமர்ந்து தெளிவாக எண்ணி மடலெழுத இயலவில்லை. விரைந்து எழுதியதில் எண்ணத் தெளிவின்மையிருப்பின் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன். செப்பமாகச் செய்ய வேண்டுமென்றே பல செயல்கள் செய்யப்பெறாமல் விடுபட்டுப்போகின்றன. குறையோடாயினும் எம்உள்ளக்கிடக்கையைத் தங்களுக்குணர்த்தவே இம்மடல். பிழைபொறுக்க. பிறபின்.

அன்பன்,

ந. முத்துக்குமரன். பல்லடம்.

இன்னும் உரைக்க நிறைய உள. இயன்ற அளவில் இனித் தொடர்ந்து எழுதி வருவேன்.

சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின்

தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புத்தாக்க நூல்!

இவை தமிழல்ல

(அயற்சொல் அகராதி)

விலை 10-00; அஞ்சல் செலவு: 1-00; பதிவஞ்சல் செலவு: 5-00

இந்திய அரசே இன்னுமா உறக்கம்?

(இலங்கைத் தமிழரின் அவலநிலை விளக்க நூல்)

விலை: 5-00; அஞ்சல் செலவு: 1-00; பதிவஞ்சல் செலவு: 5-00

அறிவன் பதிப்பகம்: 2/5,காளிகோயில்தெரு, தமிழூர்-புதுச்சேரி-9.

சிறப்புமடல்

கலைஞர் வெற்றி உறுதி!

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பாவலரேறு ஐயா அவர்களுக்குப் பணிவன்புடன் வணக்கம்!

'தென்மொழி' சுவடி 21. ஓலை 3 இல், ''கலைஞர்க்கு ஓர் இறுதி வேண்டுகோள்'' என்ற ஆசிரிய உரை மடலைப்படித்தேன். அத்துடன் தங்கள் உள்ளத்தையே பார்த்தேன். அதுபற்றி எனது கருத்தைத் தெரிவிப்பது, எனது உரிமை. அந்த உரிமையைத் தாங்கள் வெறுக்க மாட்டீர்கள் என்று நம்பியே இம்மடலை விடுக்கின்றேன்!

இன, மொழி, மீட்பு ஈழ விடுதலை பற்றிய தங்கள் உணர்வுகளை நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்கிறேன்! அதற்காகக் கலைஞர் அவர்கள் அரசியலைத் துறக்க வேண்டும் என்பதையும்; அரசியலில் பழைய நிலையைக் கலைஞர் பெறமுடியாது என்பதையும் ஏற்கமுடியாது' நடைபெற்ற தேர்தலில், சாவும், நோவும், அலையாக மாறி இருக்கா விட்டால், இந் நேரம் தமிழக முதல்வராகக் கலைஞர்தாம் இருந்திருப்பார்! கலைஞர் முதல்வராக வந்திருந்தால் சிங்கள வெறியரசு குலைநடுங்கிப் போயிருக்கும். விடுதலைப் போராளிகளுக்கு எல்லா நிலையிலும், உதவிகிட்டும்! ஈழம்மலர வேண்டும் என்பதற்காக நடுவண் அரசை எல்லா நிலையிலும் கட்டாயப் படுத்தியிருப்பார். ஆட்சியே பறிபோவதாக இருந்தாலும் ஈழம்மலர்ந்தால் போதும் என்பார்.

அந்த உறுதிக்குச்சான்று நெருக்கடிநிலை! பொதுவான நெருக்கடிநிலைக்கே ஆட்சியை இழக்க அஞ்சாத கலைஞர் இன மீட்புக்காக இழக்கவா அஞ்சுவார்? தேர்தல் வெற்றி தோல்விகள் நிலையற்றவை; மாறுகின்றவை. தங்கள் நிலையில் இனமீட்புக்கு உழைப்பது ஒருநிலை. அரசியலில் இருந்து கொண்டு கலைஞர் உழைப்பது, இன்னொரு நிலை. 83 ஆம் ஆண்டு சூன்-சூலைத் திங்களில் உலகமே கண்டிராத இனப்படுகொலையும் கற்பழிப்பும் நடந்தபோது கண்டும் காணாமலும் இருந்த நடுவண் அரசைப் பேச்சு நடத்தவாவது தூண்டியது எது, என்று கருதுகிறீர்கள்? தமிழக அரசியலே தவிர, தங்கள் இயக்கம் அன்று; அதிலும் குறிப்பாகக் கலைஞர் நடத்திய பேரணி, இரண்டு கோடி கையொப்ப இயக்கம், சட்டவரைவு எரிப்பு, இவற்றுக்கெல்லாம் முடிசூட்டியது போல் புகைவண்டி நிறுத்தப்போர்! இவையே ஆகும். கலைஞர் புகைவண்டி நிறுத்தப் போரை அறிவித்தவுடன் நடுவண் அரசு அன்றமுழுதும் வண்டிகள் ஓட்டாமல் நிறுத்தியதே! அதற்கு எது காரணியம்? கலைஞருக்கு உள்ள அரசியல் வன்மைதான் (பின்பற்றுவோரின் உறுதித்தன்மைதான்). எனவே நான் இங்கு கூற வருவது, ஒரு மாபெரும் அரசியல் இயக்கத் தலைவர் கலைஞரால் தான் நடுவண் அரசைப் பணிய வைக்கமுடியும். தாங்கள் அழைப்பது போல், ஓர் இன நலக் குழுவின் தலைவர் கலைஞர் என்ற நிலையில் முடியாது, இவ்வுண்மைகள் தாங்கள் அறியாததல்ல.

Scanned with CamScanner

கலைஞர் இலங்கைக்கு வரக் கூடாதென்று பல்லாண்டுகளுக்கு முன்பே தடை உள்ளது! வேறுயாருக்கும் தடையில்லையே!

தமிழனை அரசியல் ஈர்த்த அளவு இனமீட்பு, மொழிமீட்பு இயக்கங்கள் ஈர்க்கவில்லை! அதற்குத் தங்கள் உழைப்புக்குக் கிட்டாத் வெற்றியே சான்று! எனவே கலைஞர் அரசியலில் இருப்பது, பதவி பெறுவது, எல்லாம், இன நல,மொழிநல,உயர்வுக்குத்தாம்! அரசியலால் ஈர்க்கப்படும் தமிழ் இளைஞர்களை இன மீட்புக்குப் பக்குவப்படுத்துகிறார். அது மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக நடைபெறுகிறது.

தங்கள் மீது ஒரு மனக்குறை. "அருட்செல்வர்" (கலைஞர்) "ஆட்சியை அரணிட்டுக்காக்க" என்று எழுதிய தமிழ்மணக்கும் தங்கள் கைகள், இந்தத் தேர்தலுக்கு முன், இனநலத்திற்காக வேறு எவரைக் காட்டிலும் மிகையான ஈகம் செய்த கலைஞரை, தாங்கள் கூறிய அருட்செல்வரை ஆதரியுங்கள் என்று, உ.த.மு.க. அள்பர்களுக்கு அழைப்பு விடுக்காதது ஏன்?

இன்று தமிழக அரசியல் சூழல், 'கொக் கொக்கக் கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து" என்ற நிலையில், நடுவண் அரசு கொக்காகவும், நமது மாநில அரசு. (மா.கோ.இரா அரசு) மீனாகவும் இருக்கிறது. சீர்த்த இடத்து என்ற நிலை கனிகிறது. அப்போது. குத்து விழும். அஞ்ஞான்று அரசியல் சூழல் உறுதியாகமாறும்! அந்தமாற்றம் கலைஞரின் வளர்ச்சியாக அமையும். அந்த வளர்ச்சி முதலில் ஈழம் மலரப் பயன்படும்! அதன்பின் தாங்கள் விரும்பும் எல்லாநிலைக்கும் பயன்படும். விரிக்கின் விளக்கம் பெருகுமாதலால் இத்துடன் முடிக்கிறேன்! இம் மடலைத் தென்மொழியில் வெளியிட வேண்டுகிறேன் தங்கள் கருத்துக்கு முரண்பட்டமையைப் பொறுப்பீர்.

தங்கள் அன்புள்ள
சி. இறையரசன் — சின்ன தாராபுரம்.

வாழ்த்துடன் பொங்கல் பரிசு!

பைந்தமிழ்ப் பாவலரேறு ஐயா,

வணக்கம். நலம் நலமே வாழி.

என்னனைய செந்தமிழ் அன்பரின் அன்பு வேண்டுகோளுக் கிணங்கித் தென்னவர் தாளையேடு 'தென்மொழி'யைத் தொடர்ந்து நடத்திப் பைந்தமிழ் பாராளச் செய்து, வெள்ளிவிழா, பொன் விழா, பவளவிழாக் கண்டு, நந்தா முத்தமிழாகத் திகழ, என் பொங்கல் வாழ்த்துடன், பரிசாக, அடிக் கல்லாக, வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் உரு 200/-அனுப்பி மகிழ்கிறேன். நன்றி. வணக்கம். அன்புடன்

— புலவர் கோ. உள்ஒளி. அறி.இ; சஇ. திருப்பத்தூர் வஆ.

தொடர்-2

தமிழீழத்தை அமைக்க அனைத்துத் தேசத்திட்டம் தடையாக இருக்கிறதா?

— மலர்மாறன்.

ஒழுங்கற்ற காட்டுவிலங்காண்டிக் கும்பலால் ஆட்சி செய்யப் படுவதாக முத்திரை குத்தப்பட்ட அமைப்பிற்கு உலக ஒன்றிய (ஐ.நா.) அவையின் "நாடு" என்ற ஒப்புதலேற்பு இருக்காது. இலங்கை அரசு என்ற அரசியல் அமைப்பிற்கு உ.ஒ. அவையின் "நாடு" என்ற ஒப்புதலேற்பு இருக்கிறது.

இரண்டு அமைப்பிற்கும் உள்ள ஒரே வேற்றுமை இந்த "நாடு" என்ற ஒப்பதலேற்பு மட்டும் தான். மற்றபடி அவை இரண்டின் செயல்களும் ஒரே மாதிரியாகத்தாம் இருக்கின்றன - ஒழுங்கற்ற, காட்டு விலங்காண்டித் தனம் இவை இரண்டிற்கும் பொதுவானதாக இருக்கின்றது.

ஆகவே இலங்கை அரசை, ஒழுங்கற்ற காட்டு விலங்காண்டிக் கும்பலால் ஆட்சி செய்யப்படும் ஓர் அமைப்பு என்று கருதுவதில் ஒரு தவறும் இல்லை.

இந்தக் காட்டு விலங்காண்டிகளிடமிருந்து பிரிந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஈழத் தமிழர்கள் தனிநாடு அமைத்துக் கொள்வது எந்த வகையிலும் தவருக அமையாது.

மேலும் ஈழத் தமிழர்களின் படிநிகராளிகளாக, ஈழத் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தனைப் பேர்களுடைய பதவிகளையும் இலங்கை அரசு பறித்து கொண்டு விட்டது. ஆகவே இலங்கை அரசில் ஈழத் தமிழர்களின் உறுப்பினர்கள் இன்று யாரும் இலர். அதன் காரணமாக இலங்கை அரசு ஈழத் தமிழர்களின் அரசாக இல்லாமல் போய் விட்டது. ஓர் அரசை ஏற்படுத்தி அதனல் ஈழத் தமிழர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தங்களுக்கென்று ஏற்படுத்திக் கொள்வது, அனைத்துத் தேசச் சட்டப்படி சரியான செயலாகத் தான் இருக்கின்றது.

தேசங்கள் எப்படி உருவாகுகின்றன? உருவாக்கப்படுகின்றன? மக்களுக்காகத்தான் தேசம் இருக்கின்றது. தங்களைக் காப் பாற்றி ஆட்சி செய்ய அரசை மக்கள் அமைத்துக் கொள்ளு கிறுர்கள்.

ஒரு தேசத்தில் பல இன, மொழிகளைச் சேர்ந்த மக்கள் ஒன்ருக வாழலாம் - ஒவ்வோர் இனத்திற்கும் சம உரிமைகளும், வாய்ப்பு களும் இருக்கும் போது எந்தவகைப் பிரிவினைச் சிக்கல்களும், அந்த நாட்டில் எழுவதில்லை.

Scanned with CamScanner

எடுத்துக்காட்டாக,

சுவிட்சர்லாந்து நாட்டிலே 4 மொழிகள் பேசும் நான்கு இனங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக இணைந்து வாழ்கிறார்கள். நான்கு மொழிகளுக்கும் நான்கு இனத்தவருக்கும் அங்கே சம உரிமைகளும் வாய்ப்புகளும் உண்டு. ஆகவே அங்கே பிரிவினைச் சிக்கல்கள் எழுவதில்லை. பிரிவினை எண்ணங்கள் கூடத் தோன்றுவதில்லை.

ஓர் இனத்தை இன்னோர் இனம் - ஒரு மொழியை இன்னொரு மொழி - அடிமையாக்க முற்பட்டால் - சம வாய்ப்புகளும் உரிமைகளும் இல்லாததாக ஆக்கப்பட்டால், பிரிவினைச் சிக்கல்கள் உருவாகுகின்றன.

தாக்கம் அடையப்பட்ட இனம் தனக்கென ஒரு தனிநாடு அமைத்துக் கொள்ளும் வரை அந்தப் பிரிவினைச் சிக்கல்கள் ஓய்வதேயில்லை.

தாக்கம் அடையப்பட்ட இனம் தனிநாடு பெறுவது அமைதி முறையிலும் இருக்கலாம் அல்லது சண்டையிட்டுத் தனது நாட்டைப் பிரித்துக் கொள்ளும் முறையாகவும் இருக்கலாம். அனைத்துத் தேச சட்டங்கள் இவ் வகையான நடவடிக்கைகளுக்குக் குறுக்கே நிற்பதில்லை.

தனி நாடு பிரிப்பது அமைதி முறையிலா? அல்லது சண்டை முறையிலா? என்பது ஆட்சி செய்து கொண்டிருக்கும் இனத்தின் பண்பைப் பொறுத்து அமைகின்றது.

ஆட்சி செய்யும் இனமும் அரசும் நாகரீக மானவையாகவும் மாந்தத்தன்மை உள்ளனவாகவும், நயன்மை(நியாய) உணர்வு உள்ளனவாகவும் இருந்தால், பிரிந்து செல்லும் இனம் அமைதி முறையில் தனது அரசை அமைத்துக் கொள்ள முடியும்.

ஆட்சி செய்யும் இனமும், அரசும் நாகரீக மற்றவையாகவும் காட்டுவிலங்காண்டித் தன்மையனவாகவும், நயன்மையற்றவர்களாகவும் இருந்தால் பிரிந்து செல்லும் இனம் அமைதி முறையில் தனது அரசை அமைத்துக் கொள்ள முடியாது. - அந்தக் காட்டுவிலங்காண்டிகளுடன் போராடித்தான் தனது நிலப்பகுதியைப் பிரித்து ஆட்சியை அமைத்துக் கொள்ள முடியும்.

அடிமைப் படுத்தப்பட்ட இனம் தனது வலிமையினால் தனது மக்களுக்காகத் தனிநாடு அமைத்துக் கொள்வதை எந்த அனைத்துத்தேச சட்டமும் தடை செய்யவில்லை.

இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பார்க்கலாம் :-

இங்கிலாந்து நாட்டிலிருந்து ஐரிசு பகுதி மக்கள் பிரிந்து செல்ல விரும்பினார்கள். ஐரிசு மக்கள் எல்லோரும் பிரிந்து செல்ல

Scanned with CamScanner

விரும்புகிறார்கள், என்பதை அறிந்த உடன், அவர்களுக்குத் தனி நாடு அமைத்துக்கொள்ள உரிமை கொடுத்து விட்டது இங்கிலாந்து அரசு.

இங்கிலாந்து மக்களும், அரசும் நாகரீகமானவராகவும், மாந்தத்தன்மை, நயமை உணர்வு உள்ளவர்களாகவும் இருந்ததினால், அமைதி முறையில் ஐரிசு மக்களுக்கு விடுதலை கொடுத்து விட்டனர்.

பங்களா தேச மக்கள் பாகித்தானிடமிருந்து பிரிந்து செல்ல விரும்பினார்கள். பிரிந்து செல்ல விரும்பிய முசிபுர் ரகுமான் கட்சியைத் தேர்தலில் அதிகமாக வெற்றி பெறச் செய்து, தங்களது உள்ளக்கிடக்கையையும் தெரிவித்தார்கள். பாகித்தானியர்கள் நாகரீகமான முறையில், பங்களா தேச மக்களின் கிழக்கு வங்க நிலப்பகுதியைப் பிரித்துக் கொடுக்க மறுத்தார்கள். காட்டுவிலங்காண்டித்தனமாகக் கிழக்கு வங்க மக்களைக் கொடுமைப்படுத்தியது பாகித்தான் அரசு.

விளைவு . . . .

பங்களா தேச மக்கள் வலுக்கட்டாயமாகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தியா பங்களா தேச மக்களுக்கு ஆதரவாக இருந்து கிழக்கு வங்க மக்களுக்கு ஒரு தனி நாட்டை ஏற்படுத்திக் கொடுத்தது.

பாகித்தான் படையினரை விரட்டிவிட்டு வலுக்கட்டாய முறையில் பங்களா தேசம் அமைக்கப்பட்டுள்ளதால் அதை ஒப்புதலேற்புச் செய்ய மாட்டோம் என்று உலக நாடுகள் கூறிக் கொண்டிருக்கவில்லை. இன்று உலகத்திலுள்ள கிட்டத்தட்ட எல்லா நாடுகளும் பங்களா தேசத்தை ஒப்புக் கொண்டு விட்டன. பாகித்தான் நாடு கூட ஒப்புக் கொண்டு விட்டது.

இலங்கையில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் சிங்கள வெறியர்களும், செயவர்த்தன கும்பல்களும் நாகரீக மானவர்கள் அல்லர். மாந்தத் தன்மையும், நயமை உணர்வும் அவர்களிடம் கிடையாது என்பதை கடந்த 25 ஆண்டுகளாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது காட்டுவிலங்காண்டித்தனத்தின் உச்ச கட்டத்திற்கே அவர்கள் வந்து விட்டார்கள்.

அந்தக் காட்டு விலங்காண்டிகளிடமிருந்து தமிழ் இனத்தை மீட்டுத் தனிநாடு அமைத்துக் கொடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுப்பது அனைத்துத் தேசச் சட்டப்படி குற்றமானது அன்று. தமிழ்நாடு அரசும் நடவடிக்கை எடுக்கலாம்.

நாடுகள் உருவாவது பற்றி அனைத்துத் தேசச் சட்டம் என்ன கூறுகிறது? . . . . இதோ . . . . !

முன்பு கூறப்பட்ட அனைத்துத் தேசச் சட்டம் (International law) என்ற பொத்தகத்தில் பிரிவு IX (State Succession) பக்கம் 84, பத்தி 1.

"Partial succession takes place

(1) By succession, when another state is established by a part of the territory breaking off from the parent state and thereby gaining Independence (e.g.) the separation of the United States from parent state Great Briton in 1776'.

"ஒரு நாட்டிலுள்ள ஒரு பகுதி, அந்த நாட்டிலிருந்து தனது பகுதியைப் பிரித்துத் தனி நாடு அமைத்து உரிமை அடையலாம். அப்படி அமைத்துக் கொள்வது (Partial succession) 'பகுதிப் பிரிவு' என்று கூறப்படுகிறது. 1776 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடு இங்கிலாந்திலிருந்து பிரிந்தது இதற்கு எடுத்துக் காட்டாகும்."

முன் குறிப்பிட்ட அனைத்துத் தேசச் சட்டம் (International law) என்ற பொத்தகத்தில் பிரிவு XIII (Modes of Acquiring and losing state territory) பக்கம் 132, பத்தி.5.

Revolt followed by succession of a part of the territory of the owner state is a mode of losing territory. The examples of succession of territory by means of revolt are to the found in Neitherland's breaking off from Spain in 1579 U.S.A. from Great Briton in 1776, Brazil from Portugal in 1822 and Belgigum from Neitherlands in 1830"

"ஒரு நாட்டின் ஒரு பகுதியிலுள்ள மக்கள் புரட்சியின் மூலமாகத் தமது நிலப்பகுதியைப் பிரித்துத் தனி அரசு அமைத்துக் கொண்டால், அந்த நிலப்பகுதியை அந்த முதல் நாடு இழந்தாகக் கருதப்படும் - நாட்டின் பகுதிகளை இழக்கும் வகைகளில் இதுவும் ஒன்று. 1579 ஆம் ஆண்டு இசுப்பெயினிலிருந்து நெய்தர்லாண்ட் பிரிந்து சென்றதும், 1776 இல் பிரிட்டனிலிருந்து அமெரிக்கா பிரிந்து சென்றதும், 1822 இல் போர்ச்சுக்கல்லிலிருந்து பிரேசில் பிரிந்து சென்றதும், 1830 இல் நெய்தர்லாண்டிலிருந்து பெல்சியம் பிரிந்து சென்றதும், இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

கொடுங்கோல் ஆட்சியிலிருந்து கொடுமைப் படுத்தப்படும் இனம் பிரிந்து போவதற்கு எந்த அனைத்துத் தேசச் சட்டமும் தடை விதிக்கவில்லை. மாறாக அப்படிப் பிரிந்து செல்வதற்கு என்னென்ன வழிகள் உள்ளன என்று அவ் வழிகளை வகைப்படுத்தி வைத்துள்ளது.

கொடுமைப் படுத்தப்படும் இனம் துணிந்து செயல்பட்டுத் தனக்கென ஓர் ஆட்சியைக் கொண்டு கொடுங்கோல் ஆட்சியின் எதிர்ப்பைச் சமாளித்து விட்டால், அது தனிநாடாக ஆகி விடுகின்றது. அந்தப் புதிய நாட்டிற்குப் பிற நாடுகள் உதவி செய்வதும் தவறன்று.

ஒரு நாட்டிலுள்ள அரசு அந்த நாட்டிலுள்ள மக்களைக் கொடுமைப் படுத்திக் கொண்டு இருந்ததால் அதை அண்டை நாடுகள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டுதாம் இருக்க வேண்டுமென்று அனைத்துத் தேசச் சட்டம் கூறவில்லை.

இந்தியாவிலுள்ள கோவாவை போர்ச்சுகல் நாடு பிடித்து வைத்திருந்தது. அங்குள்ள மக்களைக் கொடுமைப் படுத்திக் கொண்டிருந்தது. சவகர்லால் நேரு முதலமைச்சராக இருந்த காலத்தில் இந்திய அரசு தனது படையை அனுப்பிக் கோவாவைப்போர்ச்சுக்கல் ஆட்சியிலிருந்து மீட்டது.

அனைத்துத் தேசச் சட்டம் இதற்கு இடம் கொடுத்துத் தான் இருக்கின்றது

மக்கள் எந்த ஆட்சியின் கீழ் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த ஆட்சியின் கீழ் வருவதற்கு, அவர்கள் சொந்த முயற்சியாலோ அல்லது பிறரின் துணையுடனோ நடவடிக்கை எடுப்பதை எந்த அனைத்துத் தேச சட்டமும் தடைசெய்யவில்லை.

கொடுங்கோலர்களின் அடக்கு முறையால் வரையப்பட்ட நாடுகளின் எல்லைக்கோடுகள் தற்காலிக மானவையே. நிலையான எல்லைக் கோடுகளை மக்களின் கருத்து தான் உறுதிசெய்கின்றது.

முன்பு கூறிய அனைத்துத் தேசச் சட்டம் என்ற பொத்தகத்தில் தலையீடு (Intervention) என்ற பிரிவு X பக்கம் 93, முதல் பத்தி.

"5. Protection of persons and property

Protection of the persons, property and interests of its Nationals may provide justification for intervention. The necessity for protection may arise due to gross injustice or due to injury caused by unfair discrimination".

"5. தன் மக்களையும் உடமைகளையும் காத்தல், தன்னுடைய தேச மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்ற ஒரு தேசத்தில் இன்னொரு தேசம் தலையிடுவது நயமையா(நியாயமா) னது தான் தங்கள் தேசத்தினர் வேற்றுமையாகக் கருதப்பட்டு நடத்தப்படுவதும்,காயப்படுத்தப்படுவதும்,நயமையற்ற முறையில் நடத்தப்படுவதும் தலையிடுவதற்குப் போதுமான காரணங்களாக அமைகின்றன."

தமிழ் ஈழ நாட்டின் பழைமையான ஈழத்தமிழ் மக்களை மட்டுமன்று, இந்திய மரபு வழியினரான தமிழ் நாட்டிலிருந்து சென்

றுள்ள தமிழர்களும் இலங்கையில் தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் உடைமைகள் சூறையாடப்படுகின்றன.

இந்த நிலைமைகள் இருந்தால் தாக்கப்பட்ட மக்களின் நாட்டு அரசு தலையிடலாம் என்று அனைத்துத் தேசச் சட்டம் தெளிவாகக் கூறியுள்ளது.

இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்ப இதை விட வேறு என்ன காரணங்கள் வேண்டியிருக்கின்றன.

"மனமிருந்தால் வழியுண்டு"

வழி தெளிவாக இருக்கின்றது - இந்திய அரசுக்கு மனது தான் வரவில்லை.

இரண்டு நாடுகள் சண்டையிட்டுக் கொள்கின்றன என்று வைத்துக் கொள்வோம். அவற்றில் ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு செய்யும் எந்தெந்தச் செயல்கள் போர்க்குற்றங்களாக (War crimes) கருதப்படும் என்பதை அனைத்துத் தேசச் சட்டம் மிகத் தெளிவாகக் கூறுகின்றது.

முன்பு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தேசச் சட்டம் (International Law) என்ற பொத்தகத்தில் பிரிவு XXXVII (War Crimes); பக்கம் 353, பத்தி 3, வரிகள் 11 லிருந்து 18 வரை.

"..... .... among others, the following, act, as violations of the rules of Warfare : use of poison gass killing wounded or surrended soldiers, disgraceful treatment of dead bodies on battle fields, ill-treatment of prisoners of war, killing or attacking harmless private enemy individuals Wanton destruction of museums, hospitals, Churches and Schools, bombardment of undefended open towns or historical mounments, attack on hospital ships, attacks on bearers of flags of truce, etc."

"......... மற்றவற்றோடு கீழ்க்காணும் செயல்களும் போர்ச் சட்டங்களை மீறிச் செய்த குற்றங்களாகக் கருதப்படும்; நச்சு வளிகளை அடுத்த நாட்டின் மீது வீசுதல், பணிவடைந்த அல்லது காயமடைந்த பகை நாட்டு வீரர்களைக் கொல்லுதல், போர்க்களத்தில் பிணங்களுக்குத் தாழ்மையான செயல்களைச் செய்தல், இரண்டகச் செயல்களைச் செய்யும்படி கேட்டல், பிணையமாக இருப்பவர்களைக் கொல்லுதல், போர்ச்சிறையாளிகளுக்குக் கெடுதியான செயல்களைச் செய்தல், பகை நாட்டிலுள்ள தீங்கிழைக்காத தனிப்பட்டவர்களைத் தாக்குவதோ அல்லது கொல்வதோ செய்தல், அரும்பொருட்காட்சியகம், மருத்துவமனைகள், கோயில்கள், பள்ளிகள் ஆகியவற்றை வேண்டுமென்றே அழித்தல், பாதுகாக்கப்படாத நகரங்கள் மீதும், வரலாற்றுப் புகழ் வாய்ந்த எச்சங்கள் மீதும் குண்டு போடுதல், மருத்துவமனையுடன் கூடிய கப்பல்களையும், அமைதிக் கொடி உள்ள கப்பல்களையும் தாக்குதல்," ஆகியவையாகும்.

(தொடரும்)

Scanned with CamScanner

தொடர்-5

தமிழினம்

தாழ்ச்சியும் வீழ்ச்சியும் மீட்சியும்

— இரணியன் —

நம்மைச்சுற்றிலும் எண்ணற்றபோராட்டங்கள் நடந்தபடி உள்ளன ! நம் ஊர்களும் தெருக்களும் வீடுகளும்கூடப் போர்க்களங்களாக மாறிப்போய் விட்டன !

உழவர்கள் போராடுகின்றனர் ! தொழிலாளர்கள் போராடுகின்றனர் ! மாணவர் போராடுகின்றனர்! ஆசிரியர் போராடுகின்றனர் ! அரசூழியர் போராடுகின்றனர் !

பணி செய்தவாறும் போராடுகின்றனர்! பணியைத் தவிர்த்தும் போராடுகின்றனர் ! அமைதி வழியிலும், வன்முறை நெறியிலும் போராடி வருகின்றனர் !

சிலர் தெளிவான பார்வைகளைக் கொண்டிருக்கிறார்கள் ! சிலர் தெளிவற்ற பார்வைகளுடன் போராடுகிறார்கள் !

சில் போராட்டங்கள் குறுங்காலத் தீர்வுக்கு உரியவை ! சில நீண்ட காலத் தீர்வுக்கு உரியவை !

இவை அனைத்தும் நமக்குச் சார்பானவை ! நமக்கு ஏந்தானவை! **இப்படிப்போராடும்மக்கள் நடுவிலே நமதுபோராட்டத்தை விதைக்கவேண்டும்! அவர்களின் போராட்டத்தை நமது போராட்டமாக மாற்ற வேண்டும் ! அவர்களுக்கு உரிய தீர்வை நமது போராட்டத்தினுள் காண்பிக்க வேண்டும் !**

காலந்தோறும் நமது வலிமையையும் நமது போராட்ட வலிமையையும் கணக்கிலெடுத்து, நாம் வினைப்படவேண்டும்! முன் செல்ல வேண்டும் !

இப்படிச் செல்லும்போது, உலகின் பலதரப்பான போராட்டங்களையும் நாம் நோட்டமிட்டே செல்லவேண்டும் ! அவற்றுடன் நம்மையும் இணைத்துக்கொள்ள வேண்டும் !

நடிப்புக்கு இடம்தரும் வாய்ப்பு ஒரு விடுதலை இயக்கத்தினுள் ஊடுபுகக் கூடாது! இன்று பலர் நடிகர்களாக இருக்கிறார்கள்! உண்மையன் என நம்பப்பட்ட ஒருவன் நடிகன் எனத் தெரியவருகையில், அவன் இயக்கத்தை விட்டுச் சேய்மைப்படுத்தப்பட வேண்டும் !

நல்லவனாய் நடிப்பவனை நல்லவன் என்றும், கொள்கையாளனாய் நடிப்பவனைக் கொள்கையாளன் என்றுமே நம்பிப் பழகிவிட்டோம் ! இதனால் நமக்கு ஏற்பட்ட இழப்புகள் அளவற்றவை !

Scanned with CamScanner

இந்த நடிகர்கள் மேடைகளில் மட்டுமில்லை' திரைகளில் மட்டுமில்லை! தமிழகத்தில் எங்கும் இருக்கிறார்கள்!

இவர்கள்தாம் போராட்டங்களைப் பின்னடையச் செய்பவர்கள்.

ஒரு விடுதலை இயக்கத்திலிருந்து தலைமை வழிபாடு தகர்க்கப்படவேண்டும்! தலைமை வழிபாடு, கொள்கையை மெலிவாக்கும்! தனிமாந்தச் சூழ்நிலையைப் பொறுத்தது தலைவனின் நிலை மாற்றம்! தலைமை வழிபாடுள்ள ஓரியக்கத்தில், தலைவனின் நிலைமாறும்போது இயக்கமும் தலை தடுமாறிப்போகும்!

நமக்கு நெறிப்படுத்தும் தோழர்கள் தேவை! நீங்கள்தாம் வழிகாட்டி என்று இறந்து போகும்படியான ஆண்டைகள் தேவை இல்லை! அவர்களின் கருத்துவேறுமை, காலப்போக்கில் போராளிகளை வெறுமைப்படுத்திவிடும்! போராளிகளை வேறு திக்கு நோக்கி அழைத்துச் சென்றுவிடும்!

எனவே, கொள்கையையே முன்நிறுத்த வேண்டும்! ஆட்களைக் கொள்கைக்குப் பின்னாதாம் நிறுத்தவேண்டும்!

சிலர் 'தமிழன் உருப்பட மாட்டான்; உணர்வுபெற மாட்டான்'! என்று திட்டுகிறார்கள்! ஏதோ உணர்வூட்டுவதற்காகவே இப்படிக் கூறுவதாகக் கருதிவிடுகிறார்கள்!

உலகியல்படி இது மிகவும் பிழையானது. இதைப் படிக்கும்போதும், கேட்கும்போதும், 'ஆமாம் உருப்பட மாட்டான்' என்ற எண்ணமே ஒரு முடிவாக மேலோங்குகிறது; இது வெறுமையில், செயலறவில். கேட்பவனை, படிப்பவனைத் தள்ளிவிடுகிறது. இத்தகைய நம்பிக்கையின்மைக் கூற்றுகள் நம் தாளிகைகளில் வெளியாவது தவிர்க்கப்பட வேண்டும்!

சிலர் எப்போதும், 'உயிரைக் கொடுக்க நான் ஆயத்தம்' எனக் கூறுவர்! உயிரைக் கொடுப்பது ஒன்றும் பெரிய செயல் இல்லை. மிக எளிது! நோகாதது! ஆனால் இந்த உயிரைப் பயன்படுத்தி, அருஞ்செயல்களைச் செய்வதுதான் மிக அரியது! அதற்கான முயற்சியே விடுதலைப் போராளிகளுக்குத் தேவையானதாகும்.

நம்மில் பலரிடம் உள்ள ஒரு குறை, ஒரு நோக்கத்தை முன்கிடத்தியபின், பிறவற்றையும் ஊடுசெலுத்திக் குழப்பம் விளைவிப்பதுதான்! இது தவறான நடைமுறையாகும்! ஒரு நோக்கத்தில்தான் மேலும் தெளிவுகள் பெறவேண்டும்! அதற்கு மட்டுமே அரண் சேர்க்க வேண்டும்! தலையாய முதன்மை நோக்கத்தைச் சிதறச் செய்யும்படியான பேச்சுகளும் நடவடிக்கைகளும் முற்றும் தவிர்க்கப்பட வேண்டும்.

சீக்கியரை ஒன்றுபடுத்த 'மதம்' என்பது இருந்தது! நமக்கு அப்படி ஏதும் இல்லை! மொழியைமட்டுமே கூட்டித் தமிழரை ஒன்று

Scanned with CamScanner

படுத்துவது கடினம் எனவே தமிழரின் மொத்தச் சுழற்சியையும் நடுவமாக்கும் ஓர் அச்சினை நாம் கண்டறிதல் வேண்டும்! அது பெரும்பாலும் பொருளியல் வாழ்வியல் போராட்டங்களில் மட்டுமே இருக்கக் கூடும்.

விடுதலை இயக்கத்தின் செயல்கள் மக்களின் மனங்களில் இடம் பிடிக்க வேண்டும்! நிலைத்து நிற்கவேண்டும்!

அவ்வாறெனில், போராளிகளின் செயல்கள் ஏற்புடையன வாயும், மக்கள் நேசிக்கும் பாங்கு உடையனவாயும் அமைதல் வேண்டும்' அவை இயக்கத்தின் கொள்கைகளை அறிவிக்கக்கூடிய தன்மையைப் பெற்றிருக்க வேண்டும். மக்களை அவை வயப்படுத்த வேண்டும்!

பிரான்சில் இனவெறிக்கு எதிர்ப்பாக ஒருசிலரால் தொடங்கப் பட்ட நடைச்செலவு முடிவில் இலக்கக்கணக்கான மக்கள் திரளு டன் நிறைவுற்றது! இந்த ஏற்பு ஒவ்வொரு செயலுக்கும் இருத்தல் வேண்டும்!

விடுதலை இயக்கத்தினை மக்கள் தமது இயக்கம் எனக்கருதும் தன்மை உருவாகிவிட வேண்டும்!

ஒரு போராளியின் நெறிபிறழ்ந்த செயல்கள் இயக்கத்தையே கொச்சைப்படுத்திவிடும்! விடுதலை இயக்கப் போராளி எத்துணை அளவு கொள்கைஉறுதியும், வினைத்திட்பமும் கொண்டுள்ளானோ, அத்துணைஅளவு மீமிசை மாந்தத்தன்மை படைத்தவனாய்த் திகழ்தல் வேண்டும்! மக்கள் நேயமே மக்கட் படையின் உயிர் மூச்சாய் அமைதல் வேண்டும்!

நாடு முழுதும் ஒரே தன்மை வாய்ந்த குமுகாய அமைப்பு இல்லை! மாவட்டம் தோறும், ஊர்கள் தோறும் குமுகாய அமைப்புகள் மாறுபட்டும் வேறுபட்டும் உள்ளன! இவற்றின் வகைப்பாடுகளை நன்கு மதிப்பிட்ட பின்பே, இயக்கக் கட்டுமானமும் செயற்பாடும் உருவாக்கப் பெறல் வேண்டும்!

தமிழகத்தில் புரட்சியானது வாழ்வியல் நடைமுறைகளிலிருந்து தொடக்கப்பெறல் வேண்டும்! தமிழினத்தை வீழ்த்தியதில் பெரும் பங்கு பெறுவது ஒப்படைப்புக் கொள்கையே! (சரணுகதித் தத்துவமே)

தமிழகத்தில் புரட்சி எண்ணம் படைத்தோர் பலர், தம் புரட்சி உணர்வுகளை, தாம் நம்பும் தலைவர்மேல் - வழிகாட்டியின்மேல் நம்பிக்கையாக மாற்றிவிடுகிறார்கள்' அந்த நம்பிக்கையினால் தம்மை தம் உணர்வுகளை அவரிடம் ஒப்படைத்து விடுகிறார்கள்! இத்தகைய கண்மூடி ஒப்படைப்பால் - சரணுகதியால், ஒரு பெரும் கும்பல் அத்தலைவன் பின் திரண்டுவிட, அக்கும்பலின் ஆள்வலிமைப் பெருக்

கம் அவனது கருத்துவலிமையைத் திசைமாற்றிவிடுகிறது! எனவே அத் தலைவன், தனிமாந்த வழிபாட்டுக்கு உரிய தலைவனாய் ஆகி விடுகிறான்!

இந்த ஒப்படைப்புக் கொள்கையிலிருந்து பண்பியல் புரட்சியின் மூலம் தமிழகத்திற்கு ஒரு விடுதலையைப் பெற்றுத்தர வேண்டும்!

குமுகாய முறைகேடுகள் அனைத்திற்கெதிராகவும், போர் தொடுப்பதே மக்கள் விடுதலைப் போராளியின் கடமை ஆகும்! முறைகேடுகட்கு எதிராக எச்சரிக்கை விடுவதும் தாக்குதல் மேற்கொள்வதும் இயங்கு நெறியின் அடுத்தடுத்த நடைமுறைகள் ஆகும்!

பொதுவாகத் தீமையைப் பரப்பும் கருவிகள் புதுமையாகவும் ஈர்ப்புடையனவாகவும் வெளிவருகின்றன! நலஞ்செய்வதற்கான கருவிகளும் செயல்களும் அவ்வாறு இருப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும். இவை புதுமையாகவும், ஈர்ப்புடையனவாகவும் அருஞ்செயல் பாங்கு உடையனவாகவும் திகழ்வது நல்லது.

இறுதியாக . . .

தமிழினம் எழுச்சிபெற வேண்டுமாயின், எவ்வெப்பகைகளை இது அடையாளம் காண வேண்டும்?

தமிழ்த் தேசிய விடுதலைக்குக் குறுக்காக நிற்கும் மதப் பகைகள்! அவற்றிலும் ஆரிய இந்து நெறியை நிலை நாட்டத் துடிக்கும் ஆர். எசு. எசு., இந்து முன்னணி - போலும் வெறிக் கூட்டங்கள்!

இவை ஆரிய நெறிக்குப் புறம்பாகவும் ஆரிய மொழிக்கு இணையாகவும் ஆரியப்பண்புக்கு நிகராகவும் பாரத மண்ணில் வேறொன்றில்லை என நிலை நாட்டுவதற்குக் கண்ணயராமல் பாடுபட்டுவரும் ஒரு கொடூர அமைப்பாகும்!

தமிழினத்திற்கும் தமிழ்ப் பண்புக்கும் திராவிட இயக்கங்கட்கும் பெரும்பகையாய் வாய்த்திருக்கும் இவ் வியக்கங்கள் அமெரிக்க நடுவப் புலனாய்வு முகவத்தின் டாலர்க் கொடையால் ஒரு பெரும் படையாக வளர்ந்து வருகின்றன!

மதங்களை - மதவெறியை-பகையை வளர்த்துவிடுவதே பொதுவுடைமை எண்ணங்கள் புகாமல் தடுப்பதற்குரிய சரியான வழி, என்பதைத் தெரிந்துகொண்ட முதலாளியச் சுரண்டல் கொள்ளையர் ஏராளமான பணத்தை மதவெறி அமைப்புகட்கு உலகெங்கும் வாரி இறைக்கின்றார்கள்!

இந்தியாவில் இந்த 'ஆரெசெசு'க் கும்பலே இவர்களுக்கு வரப் பொருளாக வாய்ந்தவை. எனவே அமெரிக்க வல்லாண்மைப்பணம், இங்கே தமிழினத்திற்கெதிராகவும் தேசிய இன விடுதலைகட்கு எதிராகவும் பயன்பட்டு வருகிறது!

இந்த அரெசெசுக் கும்பலை அம்பலப்படுத்துவதுடன், இறை நம்பிக்கையிலிருந்து விடுபட விரும்பாத தமிழர்கட்கு, நமது மதம் 'இந்து அன்று' என்பதையும், தென்னிந்தியச் 'சிவமாலியமே' தமிழர்க்கு உரியது என்பதையும், அஃது ஆரியத்திற்கு - இந்து என்னும் வைதீக நெறிக்கு எதிரானது என்பதையும் உணர்த்த வேண்டும்!

இதற்கு அப்பால், மத நம்பிக்கையை, மதவெறியை உதிரச் செய்வதற்கு, அல்லது மத உணர்வை மொழி இன உணர்விலும் பின்பட்டதாகச் செய்வதற்கு உரியவாறு கருத்துப் புகட்டலைத் தொடர்பணியாகப் புதிய புதிய முறைகளில் மேற்கொள்ள வேண்டும்.

தமிழினம் விடுபட விரும்புவதே, இந்தியாவினுள் இருக்கும் வரை மக்கள் விடுதலை மலராது என்பதாலும், அயலக, உள்முகச் சுரண்டல் ஒழியாது என்பதாலும், பொதுவுடைமைக் குமுகாயம் இதனுள் மலர வாய்ப்பில்லை என்பதனாலுமே ஆகும்.

எனவே, மக்கள் விடுதலை மலரவும் சாதிமதமற்ற தமிழினம் உருவாகவும், தமிழ்நிலத்தில் சுரண்டலற்ற, மாந்த நேயம் ஓங்கிய பொதுவுடைமை அமைப்பு முகிழ்க்கவும், பிற தேசிய இனங்களிடையிலும் இவை தோன்ற ஒத்துழைப்பு நல்கவுமே நாம் நமது தாயகத்தை அடைய விரும்புகிறோம்!

இங்குள்ள பெருநிலக் கிழார்களும், பெருமுதலாளிகளும் இவர்களால் உருவாக்கப் பெறும் அரசும், நமது விருப்பத்தினை மிகப் பெரும் கொடுஞ்செயலாய்க் கருதுகின்றன! தமது கொள்ளைக்கு இந்தியா ஒரு திறந்த மடமாகவே இருக்க அவர்கள் ஆவல் கொள்வதால், தேசிய இன விடுதலைக் குரலைக் கேட்டுப் பதறிப்போகிறார்கள்! தம் முழு வலிமையையும் காட்டி நம்மை நசுக்கப் பார்க்கிறார்கள்! தேசிய இன விடுதலை மக்கள் நலத்திற்கே தீங்கானது எனப் பொய்யைப் பரப்புகிறார்கள்!

நம்மை நசுக்கவும், நம் உணர்வுகளைக் கொச்சைப் படுத்தவும், இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், படைத்துறை, காவல் துறை, விளம்பரத்துறை அனைத்தையும் பயன் படுத்துகிறார்கள்!

எனவே, நம்மை எதிர்த்து நிற்கும் மதம், சாதி, முதலாளியம், நிலக்கிழமை, அரசு என்னும் எல்லாப் பகைகளையும் நாம் தனித்தும் சேர்த்தும் தாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்!

Scanned with CamScanner

— இதற்காக

கலை, இலக்கிய, குமுகியல் தளத்திலும் அறிவியல் தளத்திலும் நமக்கு உழைப்பாளர் தேவை!

கருத்து உழைப்பாளரும் உடல் உழைப்பாளரும் நமக்குத் தேவை!

நேரடியாக உழைப்பவரும் மறைமுகமாக உழைப்பவரும் நமக்குத் தேவை!

குறுங்கால உழைப்பாளரும் நீண்டகால உழைப்பாளரும் நமக்குத் தேவை!

புகழ்மொழியை விரும்பாமலும், வெற்றிச் சொற்களில் நாட்டம் கொள்ளாமலும், நோக்கத்திற்காகவே தம்மை ஒப்படைத்துக் கொள்ளக்கூடியவர்களும், தமது வாழ்வை மண் விடுதலையிலே பிணைத்துக் கொள்பவர்களுமான இளைஞர்களும், அறிவு முதிர்ச்சி மிக்கவர்களும், பட்டறிவு மிக்கவர்களும் நமக்குத்தேவை!

நம் வாழ்வு மலரும்!

நம் மக்கள் விடுதலை மெய்யாகும்!

சுரண்டலும் சாதி மத ஏற்றத் தாழ்வுகளுமற்ற மக்கள் அரசு மலரும்!

ஞாலத்தில் “தமிழக மக்கள் சமநெறிக் குடியரசு”

(Peoples' Socialist Republic of Tamil Nadu)

பொலிவுடன் திகழும்!

இது மெய்! மெய்!! மெய்யே!! o

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய, கிழமை இதழ்

1.	தனியிதழ்	விலை	உரு.	0. 65
2.	ஆண்டுக் கட்டணம்		உரு.	36. 00
3.	அரையாண்டுக் கட்டணம்		உரு.	18. 00

ஒரிதழுக்கு உரு.4.00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு: தமிழ் நிலம் — 5, அருணாசலத்தெரு. சென்னை 5.

விதியும் மதியும்

நாடக ஆசிரியர் அதியமான்

(வரலாற்றை நடுவமாகக் கொண்டு எழுதியக் கற்பனை நாடகம்)

முன்னுரை : அரசறிய வாழ்ந்த உயர்ந்த வணிகர் குடியினர் மாசாத்துவனும், மாநாய்கனும். இவர்களுடைய மக்களே கோவல னும் கண்ணகியும். காவிரிப்பூம்பட்டினத்தில் இவர்களை அறியாதார் யாருமில்லை. எல்லாவகை வளங்களும் மிகுதியாகக் கொண்டு, செல்வம் கொழிக்கப் புகழ் பட வாழ்ந்த பெருங்குடியினர். இவர் களுடைய மக்களுக்கு மன்றல்நாள் குறிக்கின்றனர், இச்செல்வர்கள்! அந்நந்நாளைக் குறிக்க எத்தனை எத்தனைக் கணியம் (சோதிடம்) பார்ப்பவர்களை அழைத்திருப்பார்கள்? அதுமட்டுமன்று; கணியம் பார்ப்பவர்களில் மிகமிகச் சிறப்புப்புகழ் பெற்றவர்களை அழைத்து அவர்கள் கேட்ட பொருள் என்னவானாலும், இல்லையென்று சொல் லாது, வாங்கிக்கொடுத்துப் பார்த்திருப்பர்.

கணியக் கலைஞர்களும் பன்னாட்கள் உன்னித் துருவித் துருவிப் பார்த்துக் கோவலன் கண்ணகி திருமணநாளைக் குறித்திருப்பார் கள். அந்நாள்தான் இதோ இளங்கோஅடிகள் காட்டுகிறார்கள். "வான ஊர் மதியம் சகடு அணைய, வானத்துச்ச லி ஒருமீன் தகை யாளை கோவலன்-மணந்தான்" இநநன்னாளில் எச்செயல் செயினும் குறைவின்றி நடந்தேறும். அஃது அப்படிப்பட்டநாள் என்று இன்றும் கூறுகிறார்கள். மேலும் இப்படி நன்றாகக் கூடும் நாள் வருவது அரிதாம். கோவலனும் கண்ணகியும் இல்லறம் புகும் இன்பநாள், அந்தநாளில்தான் நடந்தது.

இவ்வகைக் கோவலன் கண்ணகிக்குத் திருமணநாள் குறித்த அக் கலைமாமணிகளில் எவரும் கோவலன், கண்ணகியைப் பிரிந்து மாதவியோடு வாழ்வான் என்றோ, அல்லது பின், கண்ணகியோடு மதுரைசென்று கள்ளன் என்று குற்றஞ் சாட்டப்பட்டு மாண்டு போவான் என்றோ கூறவில்லை. கோவலனுக்குப்பின் கண்ணகி நிலையைப்பற்றியும் அக்கலைஞரில் ஒருவனும் கூறவில்லை. விதியின் இயக்கத்தை முன்கூட்டியே அறியும் ஆற்றல் கொண்ட கலைஞர் கள், ஒருவனுடைய வாழ்க்கையின் வாழ்வு தாழ்வுகளை எடுத்துக் காட்டி எச்சரிக்கும் வல்லமையுடைய அவர்கள், கண்ணகி கோவலன் நிலையைக் கூறவில்லை. எனவே கலை பார்ப்பது (சாத்திரம்பார்ப்பது) பொய் என்றும் அதனால் எவ்வகைப் பயனுமில்லை என்றும் மிகத் தெளிவாக இளங்கோ அடிகள் காட்டி விட்டார்கள்.

தம்முடைய துறவிற்குக் கரணியமாக அமைந்த விதியை வீழ்த்தி அறிவின் ஆற்றலை எடுத்துக்காட்டினார்கள். எனவே அதே

விதியின் கணிப்பு கோவலன் கண்ணகியின் வாழ்விலும் பொய்த்து விட்டது, என்பதை எடுத்துக் காட்டிவிட்டார். இனி வீணாய் தமிழர்கள் கலைபார்த்தல் (சாத்திரம் பார்த்தல்) வேண்டா. சிலப்பதிகாரத்தைக் கற்பிக்கும் தமிழாசிரியர்களே, கலை பார்த்தலை விடுவதில்லை; சிந்திக்க வேண்டும். முதுகலை சிறப்புக் கலைகளில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களின் அறிவு, கையெழுத்துக்கூட போடத்தெரியாத கலைபார்க்கும் (சாத்திரபார்க்கும்) ஏமாற்றுக்காரருடைய மூளைப் பெட்டிக்குள் அடங்கவேண்டுமா? தமிழ் அறிஞர்களே உங்கள் அறிவை ஏழ்மையாக்காதீர்கள். நாடகத்தை எழுதத் தொடங்குகிறேன். வணக்கம்!)

காட்சி 1

உறுப்பினர்கள் : இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன், இளங்கோ, அமைச்சர், படைத்தலைவன், காவலர்.

இடம் : அரண்மனை

நிலை : (மன்னன் அவைக்குள் நுழைகிறான்)

காவலன் : சேரமன்னன் . . . !

மற்றவர் : (எழுந்து) வாழ்க : வாழ்க!

காவலன் : நெடுஞ்சேரலாதன் . . . !

மற்றவர் : வாழ்க வாழ்க!

காவலன் : இமயத்தை வென்றவரே,

மற்றவர் : வாழ்க வாழ்க!

நெடுசேர : (அவைக்குள்வந்து இருக்கையில் அமர்வதற்குமுன் நின்றுகொண்டு) வாழ்க! அனைவரும் அமருக! உலகம் புகழும் சேரநாட்டு அமைச்சர்களே! படைத்தலைவர்களே! அறிஞர்களே! பனிமுடியாம் இமயத்தை இமைப்பொழுதில் வென்றுவிட்டோம். விற்கொடியை அதன் தலையில் நட்டுவிட்டோம். இவ்வெற்றி தமிழக வரலாற்றில் அசைக்கமுடியாத புகழைத் தந்துவிட்டது. தமிழனை இனி எங்கும், எவனும், எதுவும் செய்யத் துணியமாட்டான், என்ன படைத்தலைவரே அப்படித்தானே?

படைத்தலை : (எழுந்து) ஆம் மன்னா! வடவர் பணிந்துவிட்டனர். நம் முப்படைகளும் செய்த மறச் செயலை, அவர்கள் எளிதில் மறக்கமாட்டார்கள். போர்க்களத்தில் நடந்த அச்சக்காட்சிகள் அவர்களுடைய நினைவைவிட்டு அகலா. வடமன்னரின் காவல்

அடையாளக் கடம்ப மரங்களை நம் மறவர் வெட்டி, முரசுக ளாக்கி வெற்றிமுரசு கொட்டி ஆடினர். அவர்கள் இனி தென் புலத்தரசர்களுக்கு கொடுக்க வேண்டிய திறைப் பணத்தை மறக்காமல் கொணர்வர்.

நெடுஞ்சேர : (அமர்ந்து கொண்டு) நம் அமைச்சர் வாய்திற வாரோ?

அமை : பேசக்கூடாதென்பதன்று, மன்னு! நான் வருங்காலத் தைப்பற்றி ஆய்ந்து கொண்டிருக்கிறேன்.

நெடுஞ்சேர : வருங்காலத்தையா! அப்படி என்ன பொருள் இருக் கிறது உரைக்க?

அமை : (எழுந்து) அமைச்சருக்கு அழகு, வரும் பொருள் உரைத் தல் அல்லவா? இமயத்தை வென்றுவிட்டீர்கள். அச்சத்தை அங்கு விதைத்து விட்டீர்கள். அவ் வச்சம் நீடிக்க வேண்டுமே. தமிழர்கள்,தமிழ்மொழி எம்மொழி; தமிழினம் எம்இனம்; தமிழ் நாடு எம்நாடு என்ற உணர்வோடு வாழ வேண்டுமே என்பது தான் என் கவலை.

நெடுஞ்சேர : ஓஃகோ! எனக்குப்பின்னுல் வடவர் விழிப்பர். தமி ழினம் வீழுமோ என்று அச்சத்தில் கூறுகிறீர்; அப்படித் தானே?

அமை : ஆம் இறைவா!

செங்குட்டுவன் : (சட்டென்றுஎழுந்து) புலிக்குப்பிறந்தது பூனை யாகாது. என் தந்தைக்குப்பின் அந்த எதிரிகள் எழுந்தால் இந்தச்செங்குட்டுவனின் வில் விடை சொல்லும்;என்வாள் நூல் எழுதும்; என்தேர்த் தடம் வரலாறு கூறும்.

இளங்கோ : (எழுந்து) அமைச்சரே! என் அண்ணன் இமயம்முதல் கன்னிவரை ஒரு குடைக்குள் ஆள்வான்.

செங்குட்டுவன் . (எழுந்து) ஆம், இளங்கோ தம்பியுடையான் படைக்கு அஞ்சான்; நெஞ்சுரத்தோடு என் காலத்திலேயும் மறஞ் சேர்ப்பேன்.

நெடுஞ்சேர : அமைச்சரே, இப்போதே என் பிள்ளைகள் உறுதி யளித்து விட்டனர். குட்டுவன் அரசனுகட்டும் நான் ஓய்வு எடுக்கலாம் அல்லவா?

அமை : இறைவா! ஓய்வு அகத்தியமே! அந்த நிலை உங்களுக்கு இப்போது இருப்பதாய் நான் உணரவில்லை.

நெடுஞ்சேர : நீர் கூறுவதில் உண்மை உண்டு; ஆயின் என் பிள்ளை

கள் அரசாளத் தகுதியுடையவர். எனவே நான் விலகலா மல்லவா?

அமை : உற்ற வேளையில் பயிர்செய்ய வேண்டியதுதான்; தாங்கள் கூறுவதும் நல்லதே எனினும்,சிறிதுகாலம் சொல்லலாமே?

நெடுஞ்சேர : அமைச்சு, உம் கூற்றும் நல்லதே. இன்னும் பல வெற்றிகள் சேரட்டும். உம் கூற்றுப்படியே நடக்கட்டும். சரி, அவை கலையட்டும். (யாவரும் போகின்றனர்)

காட்சி — 2

உறுப்பினர்கள் : நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன், இளங்கோ, அமைச்சர், படைத்தலைவன், குறிகூறுபவன், காவல் காரன்.

இடம் : அரசவை.

நெடுஞ்சேர : (அவைக்குள் நுழைகிறான்)

காவல் : மாமன்னன்!

மற்றவர் : வாழ்க வாழ்க!

காவல் : சேரன் இமயவரம்பன்!

மற்றவர் : வாழ்க வாழ்க!

காவல் : வருங்கால மன்னன் செங்குட்டுவன்!

மற்றவர் : வாழ்க, வாழ்கவே!

காவல் : இளவரசு, இளங்கோ!

மற்றவர் : வாழ்க, வாழ்கவே!

நெடுஞ்சேர : (அமர்ந்து) அவையோரே, நம் சேரநாட்டுக் கடல் பகுதிகளில் கடல் கொள்ளைக்காரர்கள், தொல்லைகளைக் கொடுக்கிறார்களாம்.

படைத்தலை : (எழுந்து) ஆம் அரசே! பல திங்கள்களாக, நானும் இதைக்கேட்டபடி இருக்கிறேன். நேற்று இரவில்கூட உரோமுக்குச் சந்தனமும், மிளகும் ஏற்றிச்சென்ற நம் மரக்கலங்களைக்கொள்ளையிட்டிருக்கிறார்கள், அக் கடற்கொள்ளையர்.

நெடுஞ்சேர : அப்படியா? தானைத்தலைவரே, அந்தக்கொள்ளையரை அழித்துவிட்டால் என்ன?

படைத்தலை : அரசே, இந்தக் கடல்கொள்ளையர்களைக் கொன்று குவித்துவிட வேண்டியதுதான். நம்முடைய நாவாய்கள் நடுக்கமின்றி உரோமுக்குச் செல்லப் பணிக்கவேண்டும். (பணிந்து) மன்னர் கட்டளையை எதிர்பார்க்கிறேன்.

நெடுஞ்சேர : அப்படியா? யார் தலைமையில் படையை அனுப்பலாம்?

செங்குட்டுவன் : (எழுந்து) அப்பா நானே போகிறேன்; கடலில் போர்புரியும் பயிற்சியில் நான் பழக்கப்பட்டவன்.

நெடுஞ்சேர : குட்டுவா, நம் தானைத்தலைவர், என்ன குறைந்தவரா? அவரே போகட்டுமே?

செங்குட்டுவன் : அப்பா, படைத் தலைவரை நான் குறைத்து எண்ணவில்லை. அவருடன் நானும் செல்லுகிறேன், கற்ற கல்வியைப் பயன்படுத்த வேண்டும் பாருங்கள்.

நெடுஞ்சேர : அதுசரி. ஆயின் நீ அரசனானதும். அதைப்பார்த்துக் கொள்ளலாம். (இவ்வேளையில் காவலகாரன் வந்து நிற்கிறான்) யாரது காவலனா? என்ன?

காவல் : வணங்குகிறேன். அரசே யாரோ குறிகூறுபவராம்; உங்களைக் காண வாயலில் காத்துக்கிடக்கிறார்.

நெடுஞ்சேர : உள்ளே வரவிடு.

குறிசொல் : (உள்ளே வந்துகொண்டே) வாழ்க அரசர், உங்கள் தலைவிதிப்படி.

நெடுஞ்சேர : விதிக்குறி கூறுபவர். அதனால்தான் என்னை வாழ்த்தும் போதே விதிப்படி என்று குறிப்புணர்த்தி வாழ்த்துகிறார் (இருக்கையைக் காட்டி) சரி. சரி இப்படி உட்காருங்கள்.

குறிசொல் : (இருக்கையில் அமருகிறார்)

நெடுஞ்சேர : குறியுரைஞரே, வந்த வினை?

குறிசொல் : மன்னவா! தமிழகத்தில் நான் நெடுங்காலமாகச் சுற்றி வருகிறேன். மூவேந்தரில், சோழனையும், பாண்டியனையும் பார்த்துவிட்டேன். இப்போது உங்களையும் . . . .

படைத்தலை : (சட்டென்று) பார்த்தாகிவிட்டதல்லவா? போகலாம்.

குறிசொல் : ஓஃகோ! தானைத்தலைவரோ! ஏனப்பா இந்த விரைவு உனக்கு?

படைத்தலை : எங்களுக்கு வேறுவேலை இருக்கிறது. ங் . . . விரைவில் வந்த வேலையைப் பார்த்துவிட்டு, விடும் வண்டியை, என்ன? பேச்சைச் சுருக்கு!

நெடுஞ்சேர : படைத்தலைவரே; பதைப்பு வேண்டாம், நம்முடைய வேலை இக் கலைபார்ப்பரால் நிற்கப் போவதில்லை, எனனிடம் ஏதுவும் பேசுவதற்காக வந்திருக்கலாம். சினம் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

படைத்தலை : கட்டளை மன்னா!

செய்திகள்

1. மாணவர் இலக்கிய மன்ற விழா
அரசு மேனிலைப்பள்ளி, தாராபுரம்

கடந்த சுறவம் 5 (18.1.85)-ஆம் நாள் மாலை 3.00 மணி அளவில் தாராபுரம் அரசு மேனிலைப்பள்ளியில் மாணவர் இலக்கிய மன்ற விழா பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. ப. முத்துச்சாமி க.மு. கல்.மு அவர்களின் தலைமைஉரையோடு தொடங்கியது. விழாவில் திருவினர் மார்க்கிய அறிஞர் ச.ந. நாகராசன், தென்மொழி ப. துரையரசன் தென்மொழி நா. முத்துக்குமரன் அறி.இ.ப.இ ஆகியோரின் உரைக்குப்பின் 'பாவலரேறு பெருஞ்சித்திரனார்' அவர்களின் சொற்பொழிவு நிகழ்ந்தது. இடையில் ஏற்பட்ட மின்தடையால் ஒலிபெருக்கி இன்றிப் பொழிவினை நிகழ்த்த வேண்டியதாயிற்று. ஏறத்தாழ 45 நிமையங்களே உரை செய்ய இயன்றது.

ஒலிபெருக்கி இன்மை வருத்தத்தைத் தந்தது. புலவர் சென்னியப்பன் அவர்களின் நன்றியுரையோடு விழா முடிக்கப் பெற்றது.

இறுதிவரை மாணவர்களும், இருபாலாசிரியர்களும் அமைவாய் இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது,

2. தமிழர் திருநாள் சிறப்புக் கூட்டம் :
தாராபுரம் :

சென்ற சுறவம் 5 (18.1.85)-ஆம் நாள் இரவு 7.00 மணி அளவில் தாராபுரம் தமிழ்க்கலை மன்றத்தின் தமிழர் திருநாள் சிறப்புக்கூட்டம் 'முருகாலயா' அரங்கில் சிறப்புற நிகழ்ந்தது. கூட்டத்திற்கு மன்றத் தலைவர் வழக்குரைஞர் அரிமா திரு. ந. செந்தில்நாதன் க.மு. ச.மு., அவர்களின் தலைமையேற்க, மன்றச்செயலர் திரு. கு. பால்சாமுவேல் க.இ.ப.இ. அவர்களின் வரவேற்புரையோடு, மன்றச் செயற்குழு உறுப்பினர் திரு.

(முன் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்சேர : கலைஞரே, ஏதாவது என்னிடம் கேட்க வேண்டுமா?
குறிசொல் : சேரா, கேட்பது என் பழக்கமன்று.
படைத்தலை : ஓஃகோ, நுழைப்பதுதான் உன் வேலையோ?
குறிசொல் : இப்போதைக்குச் சொல்லுவதுதான் என்வேலை. அதனால் ஒரு செய்தியைக் கூறுகிறேன். எனவே, மன்னா உங்களுடைய ஒப்புதல் வேண்டும் எனக்கு, இவ்வகையில் நின்று நான் பேச.
நெடுஞ்சேர : கலைஞரே! தடையின்றிப் பேசலாம், நீர்!

— (தொடரும்)

கி. சீரங்கராயன் அவர்களின் ஆண்டறிக்கை பரப்புக்குப்பின் தென்மொழி திரு. ந. முத்துக்குமரன், அறி.இ.,ப.இ., திரு. செ. சண்முகம் க.இ.கல்.இ., ஆகியோரின் கருத்துப் பொழிவு கட்குப் பின் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'தமிழர் எழுச்சி' எனும் தலைப்பில் விறுவுரையாற்றினார்கள். ஏறத்தாழ இரண்டரை மணிநேரப் பொழிவில் தமிழர் வீழ்ச்சியையும், தாழ்ச்சியையும் கண்டு காட்டி, எழுச்சிபெறுவது எப்படி என்பதை விளக்கினார்கள்.

ஏறத்தாழ 300 பேர்கள் அமரக்கூடிய அவ்வரங்கு நிரம்பி, வெளியிலும் அன்பர்கள் நின்று கேட்ட நிகழ்ச்சி தாரையில் இதுவே முதல் முறை எனவும், இலக்கியக் கூட்டமெனில் இப்படித் தானிருக்க வேண்டும் எனவும் அன்பர்கள் பேசிச் சென்றது குறிப் பிடத் தக்கது.

விழாவில் மன்றத்தலைவர் தென்மொழி ஆண்டொப்பம் அளித்துப் பதின்மரை உறுப்பினராக்குவித்தார் என்பதும், உ.த.மு.க அன்பர் திரு. சீரங்கராயன் அவர்கள் இதை செய்வித்தார் என்பதும் நினைவுகூறத் தக்கது.

மன்றப் பொருளர் க. கிருட்டிணசாமி அவர்களின் நன்றி யுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

3. திருவள்ளுவர் விழா :
தமிழ் இலக்கிய மன்றம்
மருத்துவர் சி.பி. சாமி அறக்கட்டளை-பழனி,

கடந்த சுறவம் 6 (19.1.85)-ஆம் நாள் இரவு 7.00 மணி அளவில் பழனி தமிழ் இலக்கியமன்றம் மருத்துவர் சி.பி. சாமி அறக்கட்டளையின் சார்பில் 'திருவள்ளுவர் விழா' மருத்துவர் சி.பி. சாமி தலைமையில், மலையப்பசாமி மருத்துவமனைத் திடலில் நடைபெற்றது. திரு. த.க. நாட்டுராயன் அவர்களின் இறை வாழ்த்தோடும், திரு. சு ம ஆனந்தகிருட்டிணன் (மன்றச்செயலர்) அவர்களின் வரவேற்புரையோடும், பொங்கல் விழாப்போட்டிகளில் வென்ற மாணவர்களுக்குத் தலைவரின் பரிசளிப்புக்குப் பின் உ.த.மு.க .துணைப் பொதுச்செயலர் திரு. தென்னவன்கோ, உ.த.மு.க. முதன்மைக்குழு உறுப்பினர். திரு தென்மொழி ந.முத்துக்குமரன், ஆகியோரின் உரைக்குப்பின் உ த.மு க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'திருக்குறள் வாழ்வியல்' சிறப்புரை ஏறத்தாழ மூன்றரை மணி நேரம் நிகழ்ந்தது. திருக்குறள் பற்றிய கருத்து விளக்கங்கள் இதுவரை யாரும் சொல்லாதனவாயும், புதுமையானதாயும், சிறப்பாக இருந்தது கேட்டாரைப் பிணித்தது.

பழனியில் இதுவரை அன்பர்கள் இவ்வளவு நேரம் அமைவாய் இருந்து கேட்டது இதுவே முதல்முறை எனவும், திருக்குறளை வேதம் எனவும், மறை எனவும் கொள்வது தவறெனை உணர்ந்து

அஃது ஒரு வழிகாட்டி வாழ்வியல் நூல் என்பதை உணர்ந்ததாகவும் அன்பர்கள் தெரிவித்துச் சென்றமையும், கூட்டம் நிரம்பி வழிந்ததும் குறிப்பிடத் தக்கது.

திரு. ஆ. நாச்சிமுத்து அவர்களின் நன்றியுரையோடு விழா இனிது நிறைவுற்றது.

4 உ.த.மு.க. தொடக்க விழா :

உடுமலை வட்டம்-கோவை மாவட்டம்

கடந்த சுறவம் 7 (20.1.85)-ஆம் நாள் ஞாயிறு இரவு 7.30 மணி அளவில் உடுமலை வட்ட உ.த.மு.க. கிளை தொடக்கவிழா கழக முதன்மைக்குழு உறுப்பினர் தென்மொழி திரு. ந. முத்துக் குமரன் அறி.இ.ப.இ., அவர்கள் தலைமையில் கழகஅன்பர் சுள் ளெறும்பு கல்லை அருட்செல்வன் அவர்களின் தமிழ்வாழ்த்துடன், உடுமலைச்சத்திரம் வீதி திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

கழக உடுமலை வட்டச்செயலர் ப. அறவாழி அவர்களின் வர வேற்புரைக்குப்பின்,

கோவை மாவட்டச் செயலர் திரு. இளஞ்சேரல் முது பாண்டியன்,ஈரோடு நகரச் செயலர் திரு. ப எழிலரசன்,தலைமைக் கழக உதவியாளர் தமிழ்வென்றி,ஒட்டன்சத்திரம் நகரச் செயலர் ஒடவை தமிழ்வேந்தன், மாநில அமைப்புச் செயலர் தென்மொழி திரு. ப.துரையரசன், பெரியார் மாவட்ட அமைப்பாளர் பாவேந் தர் இராமலிங்கம், கோவை மாவட்டப் பொருளர் பல்லடம் திரு, மா. ஆறுமுகம், துணைப்பொதுச் செயலர் தென்னவன்கோ- இந்தியப் பொதுவுடைமைக்கட்சி (மா.இலெ) நடுவண் சீரமைப்புக் குழு சார்ந்த, மார்க்கிய அறிஞர் ச.ந நாகராசன் ஆகியோரின் உரைக்குப்பின்,

கழகமுதல்வர் பாவலரேறு அவர்களின் சிறப்புரை நிகழ்ந்தது. இரண்டேமுக்கால் மணி நேரம் தமிழரின் இழிவுகளையும்,நலிவுகளை யும், தாழ்ச்சிகளையும், வீழ்ச்சிகளையும் கண்டுகாட்டி, கழகம் தோன்றியதின் இன்றியமையாமையை விளக்கிக் கூறினார்கள்.

பொள்ளாச்சி வட்டச் செயலர் திரு. தென்னவன்கோ அவர் களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.

வந்திருந்த வெளியூர் அன்பர்கள் அனைவருக்கும்,பொள்ளாச்சி தென்னவன்கோ அவர்கள் அன்று இரவும் மறுநாள் காலை, பகல் வேளைகளில் உணவளித்துச் சிறப்பித்ததும் குறிப்பிடத் தக்கது. அனைத்து நிலைகளிலும் தாமே முன்னின்று முனைப்பாக செய லாற்றிய ப. அறவாழி அவர்கள் பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியவராவார்.

– செய்திகள் : தமிழ்வென்றி

(அட்டை 3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

0 : : 1058 : இந்தத் தமிழ்ப் புத்தாண்டில், தமிழர் திருநாளில் நீங்களும் குடும்பத்தவர்களும் நலம்பல பெற்று வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறேன்.

வருங்காலத்தில் தமிழர் நிலை உயர உங்கள் தொண்டு உறுதுணையாக இருக்க வேண்டும். ஆகையால், உங்கள் உடல் உறுதியுடனும் நலத்துடனும் இருந்து நீண்டநாள் வாழ, தமிழன்னை அருள்வாளாக! இந்த நந்நாளில் உங்கள் சீரிய தொண்டினுக்குத் துணை நிற்போமென்று உறுதி கூறுகிறோம். வணக்கம் பல. இங்ஙனம்,

தங்கள் அன்பின்தொண்டன்,
— சீத்தலைச்சாத்தனார் — உ,செல்லூர்.

0 : 1059 : அன்பிற்கும், பண்பிற்கும் உரிய 'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். நான் தங்களின் தென்மொழி இதழைக் கடந்த ஓர் ஆண்டாகப் படித்து வருகிறேன். அவ் விதழும் எனக்குக் கிடைத்துக்கொண்டு வருகின்றது. அதை நான் படிப்பது மட்டுமின்றி எனது சிற்றூரிலுள்ளவர்கள் படித்துவிட்டுப் பின்னர்தான் என் கைக்குக் கிட்டும். அதையே நான் பெருமையாகக் கருதுகிறேன். ஆனால் சென்ற இதழுடன் நீங்கள் அனுப்பிய துண்டு வெளியீடு ஒன்று எனக்குக் கிடைக்கவில்லை. அஃது என்ன என்பதும் எனக்குத் தெரியாது. அப்படி ஒன்று வந்ததாகக் கூறினார்கள். ஆனால் எனக்குக் கிடைக்கவில்லை. நான் கடந்தஆண்டு (1984-முதல் மாதம்) என் பெரியப்பா மலேசியா செங்கோட்டையாவுடன் தங்களைச் சந்தித்த போது, தாங்கள் கூறியவை எனது மனத்தில் நன்றாகப் பதிந்துள்ளது. தங்கள் தனித்தமிழகக் கொள்கை எந்த ஒரு மறத் தமிழனும் மறைக்க மறுக்கமுடியாத ஒன்று. இப்போதைய நிலையில் தி.க. அரசியல் கட்சிகளுடன் இணைந்து கொண்டு குமுகாயத் திருத்தம் செய்வதாகக் கூறுகிறது. அவர்களாகத் தனியாக எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. மொழி-இனம்-நாடு இவற்றையே ஒவ்வொரு நொடியும் உயிர்த்துக்கொண்டிருக்கும் தங்களால்தான் தமிழகத்திற்கும் தமிழ் ஈழத்திற்கும் விடிவுபிறக்கும். ஈழத்தில் நடக்கும் ஒவ்வொரு செயலும் (சிங்களரின் அட்டூழியங்கள்) ஒவ்வொரு மறத்தமிழன் மேல் படுகிற அம்பாக கருதி எதிர்த்து நின்று போராடியே ஆகவேண்டும். இப்போதுஉள்ள அரசியல் கட்சிகள் தமிழகத்தை அடியோடு மறந்துவிட்டு அவர்களின் பார்வை வடக்கு நோக்கியே உள்ளன. இப்போதைய ஆட்சியாளர்களின் நிலைமையை ஒரு நொடி எண்ணிப் பார்த்தால் இங்கு நடப்பது அனைத்ததிகாரத் தலைமையமைச்சர் ஆட்சியே தவிர, மாநில மக்களாட்சி அன்று. இது நமக்குத் தேவையா? இந் நிலை மாற, தனித்தமிழகம் அடைந்தே தீர வேண்டும்.

ஈழத்திலோ சிங்கள ஆட்சி. தமிழகத்திலோ ஆரிய இன நடுவண் ஆட்சி! என்ன அவலநிலை பார்த்தீர்களா? தமிழனின் நிலை

நெஞ்சே! நிமிர்வாய்!!

[கருவூர்-பாரி]

நெஞ்சே நிமிர் நீ! நேராய் நட!வா!
அஞ்சுதல் இல்லை யார்க்கும்!
பிஞ்சுகள் சிலதிவண் பிதற்றிடும்! காற்றினில்
பஞ்சுகள்! பறந்திடும்! உணர்வாய்!

நாய்கள் குரைக்கும்! நரிகள் தருக்கும்!
சாய்க்கடைப் புழுவும் நெளியும்!
தேய்மனக் கழுதை திடுமெனப் புரளும்!
தீய்ந்திடும்! காய்ந்திறும்! உணர்வாய்!

துணிவே துணையாம்! தூசே பகையும்!
பிணிமனப் பித்தரைக் கால்தம்
அணியால் அறைந்தவர் ஆணவம் சீய்க்கு
அணியம் ஆகுக துணிவாய்!

திருடன் "திருடன்! திருடன்!" என்பான்!
திருவின் வகைதெரி யாதான்!
உருவால் மாந்தன்! உணர்வால் சீழ்ப்புண்!
திருந்தாக் கசடன்! அறிவாய்!

ஏழையர் என்பவர் இப்புவி தன்னில்
கோழையர் ஆமோ? தெங்கின்
பாளையைச் சீவுதல் போற்கொடு வாளால்
ஆளையே தீர்ப்பரே! என்பாய்!

அறிவால் அளப்பரை அறிவால் அளப்பர்!
நெறியிது! எனினும் அரிவாள்
குறிதாம் சிலர்க்கெனில் குன்றென நிமிர்வோம்!
அறிவாய்! என அவர்க் கறைவாய்!

அங்காந் தெதற்கும் அலையும் சிறுமை
தங்கும் மனத்தான் புலமை
எங்கும் கறுமை! இளிப்பிற் குவமை!
சங்காய் முழங்குநீ நிமிர்ந்தே!

(முன் பக்கத் தொடர்ச்சி)

சண்டு எக்காளமிடுகின்றனர் ஆட்சியாளர்கள். இவை முடியும் தறுவாய் நெருங்கிவிட்டது. திராவிட நாடு தேவை எனக்கூறிய பெரியாரின் தொண்டர்கள், அதன் பொருளையே மாற்றப் பார்க்கின்றனர். உ.த.மு.க. எடுக்கும் முடிவுக்கு உடன்பாட்டால் தனித்தமிழகம் வெகுதூரத்தில் இல்லை. இவண்

தங்கள் அன்புத்தொண்டன்
— ந. லோகநாதன் செ. புதுப்பாளையம்,

மேலும், இந்து முன்னணி, பொங்கலன்று பத்து குழந்தைகள் பெற்ற பெண்களுக்கு வீரத்தாய் பட்டமும் உருபா ஐந்நூறும் பரிசாக வழங்கத் தீர்மானம் செய்திருக்கிறது. (1-1-85 தினமலர்). அரசு நடைமுறைப் படுத்திவரும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை இத்தீர்மானம் பகடிசெய்வதாகவே கருதவேண்டும். தாங்கள் உடனடியாக அரசுக்குத் தக்கமுறையில் எடுத்துச் சொல்லி, பொங்கலன்று பட்டமும் பரிசும் நல்காத வண்ணம் தடுத்து நிறுத்த வேண்டும். இங்ஙனம் உ.த.மு.க. தொண்டன்,

—வள்ளிகேள்வன், (து. இராசேந்திரன்) ஈரோடு.

0 : 1054 : நிலத்திலா "நீந்தும்" கலம்?

தேனிகர் பேச்சு, செந்தமிழ் ஊற்று,
வானிகர் உள்ளம், வரையென வல்லுரம்,
ஒருங்கே அமைந்த ஒப்பிலா மணியே!
அருமைத் தமிழினம் ஆள முன்போல்
உழைக்கும் பாவல! உயர்ந்த தமிழினம்
தழைத்து வாழ்ந்திட வீழும் விதையே!
தமிழினம் இக்கால் தாழ்ந்து கிடப்பதை
அமிழ்த மொழியால் அகற்றத் துடித்தீர்;
முயற்சி செய்தால் முடியும் என்றீர்;
அயர்வு விலக்குவீர் அன்பரீர் என்றீர்;
இளைப்பை ஏற்கினும் எழிற்பணி புரிந்தீர்;
உழைக்கும் உமக்கிலை உறுபயன் எனினும்
மாற்றத் துடித்தீர் அவர்கள் மனத்தை!
ஏற்க நினைத்ததா இதனைத் தமிழினம்?
உம்மரும் பணியினை உணர்ந்ததா தமிழினம்?
பொங்கும் உணர்வினைப் புரிந்ததா தமிழினம்?
நன்றே புரிவதில் நாட்டம் மிகுகோய்!
ஒன்று மட்டும் உண்மை; எல்லாம்
திரைப்பட நாட்டம் தீரும் வரையிலும்,
வரையென அறிவுரை வாரிக் குவிப்பினும்,
எண்ணம் கட்சிமேல் இருக்கும் வரையிலும்,
தெளிவினைப் பெற்றுச் சிந்தையைத் துலக்கிக்
களிப்புடன் வாழ்க்கையைக் காணுவ தென்பது
கலங்கள் கடலை வெறுத்து
நிலத்தில் நீங்கிட நினைத்தல் போன்றதே!

பனிநரள் நிகர்த்த பாவலரேறே! தங்களன்பு மறவா வீ. வில்வநாதனின் வரவிருக்கும் புத்தாண்டு வணக்கங்கள். வாழ்க பல்லாண்டு. திகழ்க நலத்தோடு. குமுகாய அறியாமை இருள் அகல, உங்கள் கருத்துத் தூண்கள் விளக்குகள் ஏந்தட்டும். அன்புடன்

வி. வில்வநாதன், வெங்காலூர்-16

0 : 1055 : அன்பு சால் பெருந்தகையீர், வணக்கம். தங்களின் தமிழ்த் தொண்டு அப்பழுக்கற்றதென இதுகாறும் கருதுபவர்களில் நானும் ஒருவள்.

தமிழ்த் தொண்டே தம் மூச்சு என எண்ணி மொழித்தூய்மையில் முழு மூச்சு விட்டு வரும் தாங்கள், அவ்வப்பொழுது அரசியல் தும்மலை ஏன் தும்முகிறீர்கள்? தமிழகத்தில் தலைச்சிறந்த பணியான மொழித் தூய்மைப் படுத்தல் தங்கள் வழியில் நடக்கட்டும். அரசியலில் தமிழ்த் தொண்டு என்பதனை ஏற்கலாம் ஆனால் தமிழ்த் தொண்டில் அரசியல் என்பது மொழித்தூய்மைத் தொண்டிற்கு ஏற்புடைத்தன்று என்பதனைச்சிறியோளாகிய நான் "இந்திராவின் மறைவும் இந்தியாவின் நிலையும்" -தாங்கள் எழுதியதால்

அரசியல் அலைகளில் சிக்காமல் செலுத்தும் தமிழ்த் தொண்டுப்படகே கரை சேரும் என்பதே என் பணிவான கருத்து.

— தங்கள்பால் அன்புகொண்ட
— இரா.வ. வரதராசன். வாணியம்பாடி

0 : 1056 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு,

வணக்கம், நலம். தங்கள் நலமே நாடுகின்றேன், சுற்றுச் செலவு முடிந்து 'தென்மொழி' இல்லம் அடைந்திருப்பீர்கள் என எண்ணுகிறேன். தாங்கள் மயிலாடுதுறை வந்த 16-12-84 என் வாழ்வின் மறத்தற்கியலாப் பொன்னாள். தங்கள் அன்பும் பண்பும் என் உள்ளத்திலும் தங்கள் பொழிவும் தனிப்பேச்சும் செவியிலும் மனத்திலும் நீங்கா வகையில் நிறைந்துள்ளன. தங்கள் பொழிவின் அரியகருத்துகளை, திருக்குறள் சிந்தனைகளைக் கூட்டத்தில் கேட்ட மன்னம்பந்தல் அஞ்சலக அதிகாரி, பேரா. செம்பியன், மற்றும் மாணவர் சிலரும் மிகவும் இங்குப் போற்றிச் சொன்னார்கள். தங்கள் பொழிவு முழுமையாக வெளிப்படும் வண்ணம் நிகழ்ச்சி மீண்டும் ஒருமுறை அமையும் வாய்ப்பையும் தங்கள் மயிலாடுதுறை வருகையையும் எதிர்நோக்குகிறேன்.

— ய. மணிகண்டன், மன்னம்பந்தல்

0 : 1057 : அன்பு கனிந்த அய்யா! வணக்கம்! நீண்ட இடைவெளிக்குப் பிறகு தங்களுக்கு நான் எழுதும் முடங்கல்.

தங்களின் உடல் நிலையை வலிவோடு காத்துக்கொள்ளுங்கள்: தங்களின்தெளிந்த கருத்தே தமிழகத்தையும், உலகத்தையும், நல்வழிப்படுத்த இயலும்.

தங்களின் உறுதியான, அச்சமற்ற, இந்திரா (அஸ்தி). சாம்பல் குறித்த வினாக்களை, வழக்குமன்ற உரை என்னையே மெய் சிலிர்க்க வைத்து விட்டது! உங்களின் இந்தப் பெரிய வீரமிக்க செயல் உலகமே வியப்பது ஆகும்,

மற்றும் தங்கள் தேர்தல் குறித்த அறிக்கை நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்தையே பகர்கின்றது என்பது தெளிவு. உண்மையை உள்ளபடியாக உரைப்பவர் நீங்கள் ஒருவர்தாம் அய்யா! பொய்ம்மையும், புறமொழியும் கையூட்டும், ஏய்ப்பும் நிறைந்த குமுகாயத்தில் கொலையும், கொள்ளையுமே மலிந்து விட்டன.

இன்று எவர்க்கும் தம் உயிரைக் காக்கும் திறம் கூட இல்லாத நிலையில் அரசின் பாதுகாப்பு அமைந்து விட்டது.

இதற்கு நாட்டின் நன்மக்கள் தக்க பாடம் புகட்டிட வேண்டும். தங்களின் ஒப்போலைகளைத் தீர ஆய்ந்தே செய்ய வேண்டும், அப்பொழுதுதான் நாட்டில் நல்லாட்சி மலரும். நாடும் பொருளியல் சிக்கலற்று வளம் பெருகும். இலங்கைத் தமிழர் தம் துன்பம் களைய வழிபிறக்கும் எனக் கருதுகின்றேன்.

இனம், மொழி, நாட்டைக் காக்க என்றும், எப்பொழுதும், என்னையும், என் உடலையும், உயிரையும் தரக்கூட தங்களுடன் ஒத்துழைப்பேன் என்று இதன்வழித் தெரிவித்துக் கொள்கின்றேன், வாழ்க! தமிழ்!

இவண், — தாழை. ந. இளவழகன் மணப்பாறை

—தொடர்ச்சி 31-ஆம் பக்கம் பார்க்க